[illegible]

வால்யூம் 18 எண் 11

3L
Rb5m-11, N111VD
N28·18·11.
156787

பாலால—ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்.
216, சைனாபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 18] விபவஹு—ஆவணி மீ [ஸஞ்சிகை 11



பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசாரியா.
வருஷ சந்தா ரூ. 3.] August 1928. [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

18 OCT 1928

ஸ்ரீ:

## விஷய ஸூசிகை.


1. மத விசாரம்—ஸ்ரீ. உ.ப. வித்வாந் த. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி ... 285
2. மங்கை மன்னன் மறம்—ஸ்ரீமந் நாதமுனிகள் சன்னிதி, திரு. அ. இராம கிருஷ்ண சடகோப தாஸர் ... ... ... ... 293
3. "சூத்ரன்" என்ற பதத்தைப்பற்றிய விசாரம்—வித்வான் ஸ்ரீ. டி. எஸ். நடேச சாஸ்திரிகள், 'வால்மீகி' மாயவரம் ... ... ... 297
4. கடிதங்கள் ... ... ... ... 303
5. பத்ராதிபரின் குறிப்புகள்:— ... ... ... ... 312
6. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யர் ... 169


## வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகை பத்ரிகை ஸம்பந்தமான கடிதங்கள் ஸம்பாதகர் ஸ்ரீ வாஸுதேவாசார்யர் மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்ற விலாஸத்திற்கும்

மற்றக் கடிதங்கள் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மா சார்யர், கார்யதர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி சென்னை என்ற விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.


மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான, எப்பொழுதும்

**C. B. S. ராவின் சர்பத்துகளையே**

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது. உத்திரவாதமுள்ளது.

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் புட்டி ரூ. 1—8 | லெமன் ,, ,, 1—8 | பாதாமி ரூபா |
| அஞ்சி ,, ,, 1—8 | ரோஜா ,, ,, 1—12 | 1—12. |

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 12 அணா.
கஸ்தூரி மாத்திரை ,, ,, 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

C. B. ஸ்ரீநிவாச ராவ், ஆயுர்வேத வைத்யர்,
92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாஹிப்பேட்டை,
ராயப்பேட்டை, P. O. மதராஸ்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கிபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18] விபவ ஹு, ஆவணி மீ [ஸஞ்சிகை 11



18 OCT 1928 MADRAS


*ஸ்ரீஹயவதநகேயம் தாரூவணைம் ஸவிகாஸமனாரவஸாம்பரம் ஓயாதே ।*
*வஸுராஹ்ககருனாவநுதாநநாவை விஜயஸெவ ஸஹிஸ்து செகேநவநா*

[ ஸ்ரீ பாகவதம், 1-9-23 ].

ஸ்ரீ:

## மத விசாரம்.

[ஸ்ரீ. உ.ப. வித்வாந் த. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி.]

இவ்வுலகின்கண் பிறப்பு வாய்ந்த எல்லா மனிதர்களும் அவரவர்கள் பகுத்தறிவுக்குத் தக்கவாறு ஒரு மதத்தில் பற்றுத லுள்ளவர்களாக இருக்க வேண்டுவது அத்யாவச்யகம்; இல்லையேல் பசுக்களுக்கும் இவர்களுக்கும் யாதொரு விதமான வேறுபாடும் ஏற்படாது. வேதங்களும் இதிஹாஸங்களும் ஸ்ம்ருதிகளும் புராணங்களும் தர்ம சாஸ்த்ரங்களும் பகுத்தறிவுள்ள ப்ராணிகளை உத்தேசித்தே மஹான்களால் வெளியிடப்பட் டிருக்கின்றன. அவற்றுள் அமைக்கப்பட்டுள்ள அருமையான விஷயங்களை நன்கு ஆராய்ந்து கண்டு அவைகளிற் கலந்துள்ள சிற்சில அஸாராம்சங்களை விலக்கி, அன்னப் பறவை பாலில் கலந்துள்ள நீரைப் பிரித்துப் பருகுவதுபோல் ஸாரதமாம்சங்களையே க்ரஹிப்பது புத்திமான்களுடைய க்ருத்யம்.

மானிடப் பிறப்பு வாய்ந்தவனுக்கு ஒரு மதத்தினிடத்தில் பற்றுத லிருந்தா லொழிய நன்னடத்தை, ஆசாரம், சுத்தி, தைவபக்தி இவைக


186787
R65 ... 18/11

ளொன்று முண்டாகா. அவர்கள் பசுவைப்போல் ஆஹாரம் நித்ரை பயம் இத்யாதிகளில் மாத்ரமே இழிந்து, புருஷார்த்தங்களை இழந்து, பரலோக சிந்தையைத் துறந்து, ஜநந மரண துக்கங்களுக்கே ஆட்பட்டு, நரகலோகத்தில் நித்யவாஸம் செய்து, யம கிங்கரர்களுடைய வேலையை ஓய்வில்லாமல் நடந்தேறும்படி செய்வார்கள். ஒரு மதத்தில் ஒருவனுக்கு நல்ல அபிநிவேச மிருந்தால்தான் நற்குணங்கள், நற்செய்கைகள், நல்ல விவேகம், தேவதா பக்தி, தர்ம சிந்தை, ஜீவ காருண்யம், ஸத்யம், தூய்மை இவைகள் போன்ற அளவிறந்த நற்குணங்கள் ஏற்படும். அதனால் அவன் இம்மையில் பரம ஸுகமும் கீர்த்தியும் அடைந்து, மறுமையிலும் சாச்வத ஸுகத்துக்கு ஆளாகிறான். இக்காரணத்தினாலேயே மஹான்கள் நாஸ்திகதையை உலகில் வெறுக்கிறார்கள். நாஸ்திகனுக்கு இம்மையுமில்லை மறுமையுமில்லை. ஆஸ்திகதையுடன் கூடின மனிதனுக்கு இங்குமுண்டு அங்குமுண்டு. [அதாவது இம்மையிலும் மறுமையிலும் ஸுகமுண்டு என்றபடி]

இம்மண்ணுலகில் நிலைபெற்றிருக்கும் எல்லா வாங்மயங்களுக்கும் புருஷார்த்தங்களை ப்ரதிபாதிப்பதில் ஸாமாந்யமாக நோக்கிருந்தபோதிலும், அவைகளுக்குத் தத்வநிரூபணத்திலேயே முக்யமான கருத்துண்டு. இதைக் கருதியே 'ஆசாரப்ரபவோ தர்மோ தர்மஸ்ய ப்ரபுரச்யுத:' என்றும், 'ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: । இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா' என்றும் அபியுக்தர்கள் பேசினார்கள். ப்ரமாணங்களாலும் ப்ரமாணாநுக்ராஹக ந்யாயங்களாலும் எந்த மதத்தில் தத்வநிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதோ அதுவே சிறந்த மதம். அப்படிக்கின்றி எளிதில் அவிழ்க்க முடியாத கபட யுக்தி க்ராந்திகளால் இசைக்கப்பட்டுள்ள வசந ஜாலங்கள் அடர்ந்த க்ரந்தங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிற தத்வங்கள், போலி மதத்தினது கொடுங் கொள்கைக்குப் பேரணிகளாகும். ஒருவன் எந்த மதஸ்தனாக இருந்தபோதிலும் அவன் அறியவேண்டிய அவச்யமான சில விஷயங்களுண்டு. அவைகளாவன:—'மத'மென்கிற சப்தம் எப்பொருளை உணர்த்தும் திறமை வாய்ந்துள்ளது? மதத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிற தத்வங்கள் யாவை? மதத்தில் முக்யமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிற பரதத்வம் யாது? மதத்தின் ஸ்வரூபம், அதை வழிபடுகிற முறை, அதனால் அடையக்கூடிய பெரும் பயன், இவைகள் யாவை? பரம புருஷார்த்தத்தை அடைவதற்கு உரிய வழி யாது? ஆகிய இவைகளே. கீழ்க் கூறியிருக்கிற விஷயங்களில் ஒன்றையுமறியாமலே கஜநிமீலிகையினால், "நான் இன்ன மதஸ்தன்" என்று சொல்லிக்கொள்வது விவேகிகளின் பரிஹாஸத்திற்கு ஆஸ்பதமாகும். அவன்



பகுத்தறிவின் பயனை இழந்தவனாக ஆவான். இந்த விஷயங்கள் புறச்சமயத்தவரால் நன்கு பராமர்சிக்கப்பட்டும், அநுபவத்தில் கொண்டுவரப்பட்டும், அம் மதஸ்தர்களின் முன்னேற்றத்திற்குக் காரணமாயிருந்து வருகின்றன. துருக்கர், கிறிஸ்தவர் முதலிய புறச்சமயிகள், 'தமது மதம் இப்படிப்பட்டது; தைவத்தை இவ்வாறு வழிபட வேண்டும்; இன்ன விஷயங்கள் தமது மதத்தில் தலைமையாய்க் கூறப்பட்டிருக்கின்றன; தைவ பக்தி இவ்வாறாகச் செய்யத் தக்கது; தைவத்தை வழிபடுவதற்கு இது பெரும் பயன்; அதை அடையவேண்டிய வழி இது' என்று பெரும்பான்மையாய் நூற்றுக்கு எண்பது பேர் வரையில் தவறாமல் உணர்ந்திருக்கின்றனர். வேதாந்தர்க்கத மதத்திலோ வென்றால், கால பலத்தால் வரவர ஆஸ்திகதை குறைந்து, மத ச்ரத்தை நாளேறும் உருவழிந்து, தைவபக்தி ஓடி ஒளிந்து, தேவதா ஸ்வரூபமும் அதனை வழிபடும் விஷயமும் இவ்விதமென்று அறியாவண்ணம் அஜ்ஞாநம் என்கிற இருள் அடர்ந்து; விவேகமென்கிற பதார்த்தமிருக்கும் இடமே தேடத்தக்கதாக ஆய்விட்டது. இதற்குக் காரணம் அச்சம்பந்தார்களுக்குத் தத்தம் மதத்தில் உள்ள அவிச்வாஸமே. இப்படிப்பட்ட அவிச்வாஸத்திற்கு ஆங்கில பாஷையின் பயிற்சியே முக்ய காரணம் என்னலாம். அதற்குக் காரணம் ஐஹிகத்தில் ஸுக ஸாதநமாக இருக்கிற தநப்ராப்தியே. ஏதோ பிந்தி நமக்கு மகா பாக்யம் வரப்போகிறதென்கிற எண்ணத்துடன் கானலைக் கண்டு நீர் என்று ப்ரமிக்கிற தாகங்கொண்ட மான்கள்போல, அவிவேகிகளான பேதைகள் எல்லோரும் த்ருஷ்டமான எல்லா நன்மைகளையும் துறந்து, ஸுகங்களையும் இழந்து, க்லேசத்துக்கே ஆள்பட்டு, துர்வித்யையை ஸத்வித்யையைப் போல் பரம ச்ரத்தையுடன் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு இந்த வித்யையைக் கற்க உண்டாகும் துர்க்குணங்களோ சொல்லி முடியா. "முதலில் மாதா பிதாக்கள் நாகரிக ஸ்வபாவமில்லாதவர்கள்; நமது அந்தஸ்துக்கு அவர்கள் ஸம்பந்தமே ஏற்காது; நாமோ நாகரிகம் வாய்ந்தவர்கள்; நாகரிகத்தில் சிறந்தவர்களான ஆங்கிலேயர்கள் குடியிருக்கிற ச்வேத த்வீபத்தில் பிறந்து வளர்ந்து தற்சமயம் இங்கு வந்திருக்கிறோம்; குடுமி வைத்துக்கொண்டிருப்பது தப்பு; பூணூல் என்பது அர்த்தமில்லாத ஒருவிதமான நூல்; புண்ட்ரம் தரிப்பதென்பது வீண் வேஷம்; ஸந்த்யா வந்தநம் மாத்யாஹ்நிகம் முதலிய நித்ய கர்மாக்கள் வீண் காலம் கழிக்கும் செய்கைகள்; அவை பயனற்றவைகள்; பெரியோர்களைப் பணிவது வீண்; மனம் போனபடி போவதுதான் தர்மம்" என்று எண்ணி அவ்விதமான எண்ணத்தைத் தத்தம் செய்கைகளால் நேரில் காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட சிறுவர்கள்மீது குறைகூறுவதில் யாதொரு

ப்ரயோஜநமும் இல்லை. இந்த வ்யக்திகளைப் பெற்றெடுத்த தாய் தந்தைகளே இந்தக் குற்றத்திற்குக் காரணமாகிறார்கள். சுத்த வெள்ளை வஸ்த்ரத்தில் சாயம் ஸுலபத்தில் பிடிப்பதுபோல், பால்யத்தில் சுத்தமாக இருக்கிற மநஸ்ஸில் எது முதலில் படிமோ அதுவே நன்கு வேரூன்றி விடுகிறது. இந்தச் சிறுவர்களை ஐந்தாவது வயதில் பெற்றோர்கள் படிக்க வைக்கும் பொழுதே, மணையில் நான்கு வைதிகர்களுக்கு முன் வழக்க மென்கிற நிர்ப்பந்தத்திற்கு உட்பட்டு, மன மொப்பாமல், "ஹரி: ஓம் நமோ நாராயணாய" என்கிற அக்ஷரங்களைச் சொல்லிக் கொடுத்துவிட்டு, உடனே ஆங்கிலப் பள்ளிக்கூடத்துக்கே அனுப்புகிறார்களே யொழிய, தொடக்கத்தில் மூல வித்யையில் சிறுவர்களுக்குப் பயிற்சியை உண்டுபண்ணி, 'நம்முடைய மதம் இப்படிப்பட்டது; ஆசாரம் இத்தன்மையது' என்று கற்பிக்கிறார்களில்லை. பால்யத்தில் சிறுவர்கட்கு மத ரஹஸ்யங்கள், உபாஸிக்கத்தக்க தேவதா ஸ்வரூபம், உபாஸநம் செய்கிற வழி, தர்மம், நீதிகள், குலாசாரம், லோகாசாரம் இவைகளையும் தவறாமல் சொல்லிவைத்து, உபநயநம் செய்தவுடன் ஒரு வருஷமாவது வேதாத்யயநம் பண்ணும்படி செய்வித்து, அக்காலத்திலேயே மந்த்ரங்களின் மஹிமை, உபநயநத்தால் ஏற்படுகிற ப்ராஹ்மண்ய ப்ரபாவம், சிகா புண்ட்ர யஜ்ஞோபவீதங்களின் ஆவச்யகதை, ப்ராதஸ்நாந மஹிமை இவைகளைச் சுருக்கமாக உபதேசிக்கும்படி செய்விக்க வேண்டும். இவ்வாறு செய்யப்படும் உபதேசமே பால்யத்தில் சிறுவர்களின் மனத்தில் த்ருடமாக வேரூன்றிவிடும். பிறகு எவ்விதமான கொடுங்கல்வியினாலும் துருபதேசத்தாலும் துஷ்டச் சேர்க்கையினாலும் த்ருடமான பூர்வ ஸம்ஸ்காரத்திற்கு மாறுபாடு ஏற்படாது. அவ்வண்ணம் பெற்றோர் செய்யாத குற்றத்தினால் தற்காலம் சிறுவர்களெல்லாம் விவேகத்தை இழந்து, தமது மதம், குலம், ஆசாரம், தர்மம் இவைகளில் ஒன்றையும் அறியாமல் பேதைகளாகி, ஆஹார நித்ரா பயங்களை அனுபவிப்பவர்களாய்ப் பார்த்தவர்கள் பரிஹஸிக்கத்தக்க நிலைமையில் இருக்கிறார்கள். உயர்ந்த மதம், ஜாதி, தர்மம், ஆசாரம், சீலம், குலம் ஆகிய எல்லா மிருந்தும், இவ்வளவையும் இழந்து, பரிதாபகரமான நிலைமையில் தடுமாறுகிற இந்த பாக்யஹீநர்களைக் கண்டு புறச்சமயத்தார்கள் நகைக்கின்றனர். இவர்களை விட அந்தப் போலி மனிதர்கள் சிறப்பு வாய்ந்தவர்களென்று உலகத்தார் எண்ணும்படி நடித்துக் காட்டுகிறார்கள். போலி மதஸ்தர்கள் தங்கள் மத ரஹஸ்யங்களைச் சிறுவர்கள் கூட எளிதில் அறியும்படி சுருக்கமாக க்ரந்த முகமாக அச்சிட்டு, அந்த க்ரந்தங்களால் தங்கள் மதக்கொள்கை, ஏதோ ஒரு விதமான மதாசாரம், தேவதா ஸ்வரூபம், அதை வழிபடுகிற மார்க்கம், பக்தி, நற்குணங்கள், இம்மையில் மனிதன் செய்யவேண்டிய கார்யங்கள்,



மறுமையில் ஆன்மாக்க ளடையவேண்டிய நன்மைகள், இவ்வளவையும் உலகில் எல்லோரும் அறியும்படி செய்து, தங்கள் மதத்தை நாளொரு வண்ணம் தழைக்கச் செய்கிறார்கள். நாம் அனைத்தையும் நேரில் பார்த்திருந்தும், இந்த அநர்த்தத்தை நீக்க முயலாமலிருப்பது நம்மவர்களுடைய துர்ப்பாக்யமே.

ஸந்மதங்களுக்குள் சிறப்பு வாய்ந்ததான நமது விசிஷ்டாத்வைத மதமென்கிற ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதம் வ்ருத்தி யடைந்து வருவது ஜகத்திற்கு மஹா க்ஷேமகரமானது. இத்தகைய மஹிமை வாய்ந்த மதத்தின் அபிவ்ருத்தியைக் கவனிக்காமலே தார்மிகர்களும் ஆஸ்திகர்களும் ஆசார்யர்களும் ஜ்ஞாநிகளும் கர்மாநுஷ்டாநபரர்களும் மநஸ்விகளும் வீண்காலம் கழிக்கின்றனர். இவர்களை நாடி, "நாம் மதாபிவ்ருத்தியைக் கவனிக்கவேண்டாமா? நீங்கள் இவ்வண்ணமிருந்தால் யார்தான் கவனிப்பது?" என்று வினவினால் அவர்கள், "ந ஹி ஜாதவேதஸம் தூஷவ ஸகஸ்ரோஜித— ஸஹதி" என்கிற ந்யாயத்தை எடுத்துக்காட்டி, அதற்கென்று ஏற்பட்டிருக்கிற ஆசார்யர்கள் செய்யட்டும்; அவர்களே இதில் ஐதம்பர்யத்தை விட்டுவிட்டால் நாம் என்ன செய்யலாம்? நம்மால் இது அஸாத்யம்" என்று பதில் சொல்லிவிடுகிறார்கள். இவ்வாறு ஆஸ்திகர்களான மதாபிமாநிகள் உதாஸீநர்களாக இருந்துவிட்டால், நாம் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நமது மதம் துர்மதங்களால் கபளீகரிக்கப்பட்டுப் பாம்பின்வாயில் அகப்பட்ட தவளையின் நிலைமையைப் பெற்று ஸ்வரூப நாசத்தை அடைந்துவிடும். ஆகவே, இப்படிப்பட்ட அநர்த்தங்கள் நேராமல் நமது விசிஷ்டாத்வைத மத ரத்நத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யக்கூடிய உபாயங்களில் முக்யமான சில உபாயங்களைச் செய்ய வேண்டும். அவைகளாவன:—"ஸம்ஸ்க்ருத பாஷாபிவ்ருத்தி: எல்லாச் சிறுவர்களையும் பெற்றோர்கள் தொடக்கத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையில் பயிற்சி செய்வித்தல்; ஆங்கில கலாசாலைகளிலும் கட்டாயமாகப் படிக்க வேண்டிய பாஷைகளுக்குள் ஸம்ஸ்க்ருத பாஷையையே எடுத்துக் கொள்ளும்படி பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் போதித்தல்; ஆசாரங்களை நன்கு கற்பித்தல்; எங்கும் ஆஹாரங்களை எடுத்துக் கொள்ளுகிற தென்னும் பிள்ளைகளின் கெட்ட வழக்கத்தைப் பெற்றோர்கள் கட்டாயமாகத் தடுத்தல்; க்ராமங்களிலும் நகரங்களிலும் முக்யமான புண்ய ஸ்தலங்களிலும் மத விஷயமான ரஹஸ்யங்களையும் தர்மங்களையும் ஆசாரங்களையும் எடுத்து உரைக்க வல்ல பண்டிதர்களைக் கொண்டு உபந்யாஸம் செய்வித்தல்; நித்யகர்மாநுஷ்டாநங்களை ச்ரத்தையுடன் அநுஷ்டிக்கும்படி ஒவ்வொரு பிள்ளையையும் பெற்றோர்களோ அல்லது பெரியோர்களோ தூண்டுதல்" ஆகிய இவைகளே.

இப்படிப்பட்ட விஷயங்களைச் செய்யாமல் நாம் மௌனமாயிருந்தால், நாம் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நமது மதம் ஆற்றோரமிருக்கிற மரத்தின் கதியை அடைந்துவிடும். இந்த விஷயத்தில் ஆஸ்திகர்கள் அனைவரும் ஒன்றுபட்டு த்ரவ்யத்தாலும் வாக்கினாலும் முயற்சியினாலும் மதவிஷயமான அபிவ்ருத்தி கார்யத்தில் முன் வந்து, அவரவர்களும் தத்தம் க்ருஹ க்ருத்யம் போல் இக்கார்யத்தை எண்ணி, ரத்தத்தை இழுப்பது போல் ஒன்று சேர்ந்து இந்தக் கைங்கர்யத்தை நிர்வஹித்தால், நமது ஸ்ரீபகவத் ராமாநுஜ பரிக்ருஹீதமான விசிஷ்டாத்வைத மத ஸித்தாந்தம் தேஜிஷ்டமாக உலகின் கண் ஜ்வலிக்கும்; இல்லையேல் அது இருளடைந்து விடும். வீடு கட்டினால் பிற்காலத்தில் அதற்குக் கெடுதல் வாராமலிருப்பதற்காக அதைப் பழுது பார்ப்பது போல, வெகுகாலத்திற்கு முன் அஸ்திவாரம் போட்டு த்ருடமாகக் கட்டி எழுப்பப்பட்டுள்ள இந்த விசிஷ்டாத்வைத மதமும் தத்காலம் பரிஷ்கரிக்கத் தக்கதே.

இந்த மதமாகிற வீட்டுக்குத் தலைவாசல் பக்தி ஒன்றே. உபநிஷத்துக்கள் அதற்குத் தூண்கள். ஸகுண நிர்க்குண ச்ருதிகளும் பேதாபேத ச்ருதிகளும் மேல் கூரைகள். இந்த வீட்டில் ஸ்திரவாஸம் பண்ணுகிறவன் ஸ்ரீமந் நாராயணன். இவனுக்கு நிருபாதிக கிங்கரர்கள் (அதாவது வேலையாட்கள்) சேதநர்கள். இந்த வேலைக்காரர்களுடைய வேலைகளுக்குத் தக்கவண்ணம் பரமபுருஷன் கொடுக்கும் கூலி ஐஹிகாமுஷ்மிக போகங்கள். கர்ம யோகிகளாலும் ஜ்ஞாநயோகிகளாலும் பக்தர்களாலும் ப்ரபந்நர்களாலும் இந்த வீடு எப்பொழுதும் ஆச்ரயிக்கப்பட்டு இருந்துவருகிறது; ஸத்யம்போல் யாவராலும் ஆச்ரயித்து ஸுகித்து வாழத்தக்கது. இந்த மதத்திலுள்ள தத்வ ரத்நங்கள் விலை மதிப்பில்லாதவைகள். அவைகள் நாஸ்திகர்களையும் ஆஸ்திகர்களாகச் செய்து, அவர்கள் மனத்திலும் பக்தியை உண்டுபண்ணி ஈச்வரன் க்ருபைக்கு அவர்களை ஆட்படுத்தும் மஹிமை வாய்ந்தவை. ப்ராணி ஸாமாந்யத்துக்குக் கர்மாவினாலும் ஜ்ஞாநத்தினாலும் பக்தியினாலும் ப்ரபத்தியினாலும் பிறவிப் பிணியைத் தீர்க்கத் திறமையுள்ளது இந்த மதமென்கிற ஸித்தௌஷதமே. விஷ்வக்ஸேனரென்றும் ஆதிசேஷனென்றும் உபபத்தி பாஹுள்யத்தால் உத்ப்ரேக்ஷிக்கப்படாநின்ற ஸ்ரீ பாஷ்யகாரர், இந்த ஸந்மதத்தை ஸதாசார்யர்களுடைய அநுக்ரஹத்தினால் உலகத்தில் ப்ரகாசிக்கச் செய்தார். அந்த மஹாபுருஷனைத் தேவதையாகப் பாவிக்கிற நாம் செய்யவேண்டியது இவ்வுலகத்தில் யாதெனில், அவருடைய கொள்கைகளை நாமும் ஸரிவர அநுஷ்டித்து, மற்றவர்களெல்லோரையும் அநுஷ்டிக்கச் செய்விப்பதேயாம். அத்தகைய கொள்கைகளில் முக்யமானது, 'ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து



ப்ரவர்த்திப்பித்தல்' என்பதே. இதனைத் தவறாமல் அநுஷ்டிக்கச் செய்வதற்காகவே ஆசார்யபீடங்கள் ஆதி புருஷர்களால் ஏற்படுத்தப்பட்டன. அநேக வித ஒழுங்கீனங்களால் அந்த மூல புருஷர்களுடைய அபிஸந்தி பூர்ணமாக நிறைவேறாமல்போனாலும் இக்காலத்திலுள்ள மதாசார்யர்கள் கூடியவரையில் ஸ்வாநுஷ்டாநங்களால் அதைக் கைவிடாமல் சக்த்யநுஸாரமாக நடத்தி ஸார்த்தகமாக ஆக்குகிறார்கள். இப்படிப்பட்ட ஆசார்யர்களில்லாவிடில் இப்பொழுது ராமாநுஜ மதமென்கிற பெயரே ஒழிந்துபோயிருக்கும். தூதவிகளாகவும் ஜ்ஞாதாக்களாகவும் கர்மடர்களாகவும் ஆஸ்திகாக்ரேஸரர்களாகவுமிருக்கிற இந்தத் திவ்ய புருஷர்களால்தான் கொடியதான இந்த யுகத்தில் வைதிக தர்மங்கள், ஆசாரங்கள், மந்த்ரங்கள், அநுஷ்டாநங்கள், ப்ரஹ்ம ஜ்ஞாநம் ஆகிய இவைகள் இதுகாறும் நிலைபெற்று வருகின்றன. இவ்வண்ணம் ஆசார்யகம் பண்ணுகின்ற மஹான்களுக்குப் பக்கபலமாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் இருந்து, தங்களை வீணாக்காமல் மதவ்ருத்தி மார்க்கத்தில் செலவிட்டு, ஆங்காங்கு ஸம்ஸ்க்ருத பாடசாலைகளை வைத்து, அவைகளில் வேத சாஸ்த்ரங்களையும் தர்ம சாஸ்த்ரங்களையும் படிப்பிக்கச் செய்து, அடிக்கடி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தையும் நல்லொழுக்கத்தையும் கற்றறிந்தவர்களைக் கொண்டு போதிக்கச் செய்து வருவதுடன், வர்ஷம் ஒன்றுக்கு இருபத்தைந்து பெயருக்குக் குறையாமல் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் தேர்ச்சியடையச் செய்து மதத்தைச் செழிப்பித்து வரவேண்டும். கீழ்க் கன்றாகவில்லாவிட்டால் வாழைத் தோட்டம் என்ன கதியடையுமோ அந்த ஸ்திதிக்குக் கூடிய சீக்கிரம் நமது விசிஷ்டாத்வைத மதம் வந்துவிடும் போலிருக்கிறது. ஒருவராவது வேதாந்த சாஸ்த்ர பரிசயம் பண்ணுவதில்லை. ப்ரத்யுத பரிசயம் பண்ணுகிறவர்களைப் பரிஹஸிப்பவர் பலர். 'அஹொ திவிசர உபவிசதம்' என்கிற வசநத்தின்படி நமது மதம், ஆசாரம் தர்மம், ஜ்ஞாநம், தத்வ விசாரம், ஆஸ்திக்யம், பக்தி எல்லாம் ஒளிந்து விட்டனவே! அந்தோ! பரிதாபம்! இன்னும் எல்லோரும் உறங்குகிறீர்களே! இப்போதேனும் கண்விழிக்கலாகாதா? துர்வாஸனையை மாற்றி மனத்தில் நல்வாஸனையைப் புகுவிடுங்கள். இது பெரிய ஆபத்காலம். இப்பொழுது கைகொடுத்தால் மதம் உஜ்ஜீவிக்கும். இந்த ஸமயம் தவறினால் நமது மனோரதங்கள் முற்றிலும் அழிந்துவிடும். நமது பாஷ்யகாரரை உள்ளத்தில் சற்றுக் கவனித்தாவது, நமது மதத்தில் கௌரவத்தைப் பாராட்டுங்கள். ஸ்ரீ பாஷ்யகாரருக்குப் பெரிய பெருமாள் உபயவிபூதி ஐச்வர்யத்தையும் கொடுத்து, 'உடையவர்' என்று திருநாமத்தை அநுக்ரஹித்தார். திருவேங்கடமுடையான் திருவாழி திருச்சங்கு

களைத் திருவுள்ளம் பற்றி விரோதி நிரஸந சக்தியை அநுக்ரஹித்தார். பேரருளாளனும் உடையவர் ஸமர்ப்பித்த தீர்த்தத்தை அமுதுசெய்து பரம திருப்தி யடைந்து, திருக்கச்சி நம்பி முகமாக உடையவருக்கு ஆறு வார்த்தைகளை உபதேசித்து உபகரித்தருளினார். திருநாராயணனும் ஸ்வப்நத்தில் தாமிருக்கிற இடத்தைச் சொல்லி உடையவர் முகமாகத் தம்மை ப்ரதிஷ்டிப்பித்து, அஸாதாரணமான கீர்த்தியை உடையவருக்கு அளித்தார். பெரிய நம்பி முதலிய ஆசார்யர்கள் உடையவர் விஷயத்தில் செய்தருளின அநுக்ரஹ விசேஷங்கள் அளவிறந்தனவாகும். இப்படிப்பட்ட திவ்ய தேசங்களிலுள்ள எம்பெருமான்களின் அநுக்ரஹ பலத்தாலும், ஆசார்யர்களுடைய பரம க்ருபையினாலும், ஸ்ரீமத் பாஷ்யகாரர் ஒப்பற்ற ஜ்ஞாந வைராக்யங்களையும் பரவாதி நிரஸந சக்தியையும் சாஸ்த்ரங்களில் நிகரில்லாத பாண்டித்யத்தையும் பெற்று, ஜகத்தில் ஜங்கம பாரிஜாதம்போல் எல்லாருக்கும் எல்லா அபீஷ்டங்களையும் விளையச் செய்வித்து, பிற்காலத்திலும் எல்லாரும் உலகத்தில் உஜ்ஜீவிக்க வேண்டுமென்கிற பரம கருணையினால் ஸ்ரீ பாஷ்யம் முதலான க்ரந்தங்களைச் செய்து, இருள் தருமா ஞாலத்தில் ஆழங்கால் பட்டிருக்கிற சேதநர்களில் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களைத் தெரிந்து உபாயத்தை அநுஷ்டித்து, வர்ணாச்ரமாசாரங்களை அநுவர்த்திக்குமவர்களுக்கே பரமபுருஷார்த்தமுண்டாகுமென்று அறுதி இட்டருளினார். இத்தகைய மஹிமை வாய்ந்தவர் நம் மதாசார்யன். நமது மதத்திலே ஸர்வ ச்ருதிகளுக்கும் ஐககண்ட்யம் ஸாதிக்கப்பட்டிருக்கிறது. முக்தியிலே சேதநர்களுக்கு ப்ரஹ்மத்தோடு ஆநந்தத்தில் பரமஸாம்யம் கூறப்பட்டிருக்கிறது. ப்ரத்யக்ஷம் அநுமாநம் சப்தம் என்கிற மூன்று ப்ரமாணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. உபாஸநா மார்க்கங்களின் பேதங்களும் ப்ரபத்தியின் ஸ்வரூபமும் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. வர்ணாச்ரம தர்மங்கள், கர்மயோகம் முதலிய யோகங்களுக்கு அங்கமென்று ஸாதிக்கப்பட்டிருக்கின்றன. ஸாத்விக தேவதையாகிய ஸ்ரீமந் நாராயணனே ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸைக் கோருமவர்களால் ஆச்ரயிக்கத் தக்கவனென்பதும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சேதநாசேதநங்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் சரீர சரீரி பாவம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படி, காமதேநு போலவும் கல்பக விருக்ஷம் போலவும் ப்ராணிகளுக்கு எல்லா அபீஷ்டங்களையும் பரப்பதில் ஸந்நத்தமாக ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதம் எவ்வாறு உத்தரோத்தரம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தேறி அநுதிநா தமிதமாக ஆசந்த்ரார்க்கம் புவியில் நிலைபெற்று ஸ்ரீ வைஷ்ணவ ஸமாஜம் வளர்ந்து வருமோ, அவ்விதமான வழியை ஆஸ்திகர்கள் அனைவரும் தேட வேண்டுமென்று வணக்கத்துடன் விஜ்ஞாபித்துக்கொள்ளுகிறேன்.



ஸ்ரீ:

# மங்கை மன்னன் மறம்.

[ஸ்ரீமந் நாதமுனிகள் ஸந்நிதி, திரு. அ. இராம கிருஷ்ணசடகோப தாஸன்]

(278-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## மூன்றாம் மறம்.

இனித் திருப்பிரிதிக்குச் சென்ற ஆழ்வார், அத்திருப்பிரிதி யெம்பெருமானுக்கொரு பதிகமும் அருளிப் பின்னர், திருவதரி, சாளக்கிராமம், நைமிசாரண்ணியம், சிங்கவேழ் குன்றம், திருவேங்கடம், திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடன் மல்லை, திருவிடவெந்தை, திருவட்ட புயகரம், பரமேச்சுர விண்ணகரம், திருக்கோவலூர், திருவயிந்திரபுரம், திருச்சித்திர கூடம் முதலிய திருப்பதிகளுக்கு முறையே திருப்பதிகங்கள் ஓதி, பின்னர் காழிச் சீராம விண்ணகரத்திற்குத் தம்முடைய விருதுகளுடனே மஹா காம்பீர்யத்துடன் திருவடியார் திருக்கூட்டஞ் சூழ வெழுந்தருளினார். அப்போழ்துதான் மூன்றாம் மறம் நிகழ்கின்றது.

இம்மூன்றாம் மறம் சிவபெருமான் அடியார்களிற் றலைசிறந்தோராகிய திருஞான சம்பந்தருக்கும் நமது திருமங்கையாழ்வார்க்கும் ௸ காழிச் சீராம விண்ணகரத்திலே நடந்த சம்வாதத்தைப் பற்றியதாகும். இதனையும் மறம் என்றதென்னை யெனின்: ௸ சம்வாதத்தில் திருமங்கையாழ்வாரே சம்பந்தரை வென்று அவ்வெற்றியின் அறிகுறியாக அவர்தம் வேலை வாங்கிய வீரம் காட்டப்படுதலின் இவ்வாறு கூறினாமென்க.

காழிச் சீராம விண்ணகர வழியாக ஆழ்வார் எழுந்தருளும்போது, சம்பந்தர் சீடர்கட்கும் நம் ஆழ்வார் சீடர்கட்கும் சமய சம்பந்தமாகச் சச்சரவு நடக்கவே, அஃது முற்றிய வேலைக்கண், இருபெருஞ் சமயத் தலைவர்களும் நேர் முகமாகச் சந்திக்கச் சமயம் நேர்ந்தது. இருபேர் அடியார்களும் இறைவனைக் காணும் பேற்றி யமைந்தோராய்க் கடவுட்டன்மை வாய்ந்தோராதலின், சொற்ப படிப்பினர் செய்யும் வெற்றாரவார சமயவாதச் செருக்கினை யொழித்து, மிகவும் மரியாதையாக ஒருவர்க்கொருவர் தருக்கித்தார்கள். தருக்க முடிவில்,

"கடியுண்ட நெடுவாளை காவிற் றப்பிக்
கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய
அடியுண்ட வுயர்தெங்கின் பழத்தாற் பூகம்
அலையுண்டு குலைசிதறு மாலி நாடா!
படியுண்ட பெருமானைப் பரிந்து பாடிப்
பதம்பெற்ற பெருமானே! தமியேன் பெற்ற
கொடி யொன்று நின்பவனிக் கெதிரே சென்று
கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந்தாளே!—[தனிப்பாடல்]

என்று சம்பந்தர் கூற, அவர்க்கு எதிர்த்தட்டாக ஆழ்வார்,

"வறுக்கைநறுங் கனிசிதறிச் செந்தேன் பொங்கி
மடுக்கரையிற் குளக்கரையின் மதகி லோடப்
பெருக்கெடுத்து வண்டோலஞ் செய்யுங் காழிப்
பிள்ளையார் சம்பந்தப் பெருமாள்! சேலீர்
அருட்குலவு மயிலைதனி லனலால் வெந்த
அங்கத்தைப் பூம்பாவை யாக்கி னேமென்
றிருக்குமது தகவன்று நிலவால் வெந்த
இளையுமோர் பெண்ணுக்க வியல்பு தானே"—[தனிப்பாடல்]

என்று கூறியருளினர். சம்பந்தர் இதைக் கேட்டதும் மிகவும் உவகை கூர்ந்து ஆழ்வாரை வாழ்த்தி, அவரது தமிழ் வளத்தினையும் பகவத் பக்தியினையும் புகழ்ந்து, தம்முடைய வேலை ஆழ்வார்க்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். இவ்வெற்றி தோன்ற ஆழ்வாரும் காழிச் சீராம விண்ணகரப் பதிகத்து இறுதிச் செய்யுளிலே, "கொற்றவேற் பரகாலன்" என்று குறிப்பிட்டமை காண்க. அற்றன்று: திருமங்கையாழ்வார், 'வடிகொள் வேல் வலவன் கலிகன்றி', 'மானவேற் கலியன்', 'ஊனமற் வேற்கலிகன்றி', 'காய் சினவேற் கலியன்', 'கூரார்ந்த வேற்கலியன்', 'கூரணிந்த வேல்வலவன்' 'கூர்கொள் நல்ல வேற்கலியன்' 'காலவேற் பரகாலன்,' 'செருநீர் வேல்வலவன் கலிகன்றி' என்று ஏனைப் பதிகங்களில் எல்லாம், அவர் தம் மரபுக்குரிய அவ்வாயுதத்தைக் கையிற்கொண்ட தன்மை விளங்குமாறு கூறுதல்போல் ஈண்டும் உரைத்திட்டாராகலின், நம்முரை அசம்பாவிதமாம் பிறவெனின்: அறியாது கடாயினாய்! ஷை. இடங்களில் எல்லாம், 'கொற்றவேற் பரகாலன்' என்ற தொடர் மொழியினைப் பெய்யாமையானும், இப்பதிகத்து ஈற்றுச் செய்யுளிலே போந்த 'ஆலிநாடன்,' 'அருண்மாரி' 'அரட்டமுக்கி,' 'அடையார் சீயம்,' 'மங்கைவேந்தன்,' 'கொற்றவேற் பரகாலன்',



'கலியன்,' முதலிய விருதுப் பெயர்கள் ஏனை இடங்களில் இவ்வளவு ஆற்றலுடன் ஒருங்கே அமையாமையானும், ஆழ்வார் இவ்விருதுப் பெயர்களுடன் ஷை தலத்துக்கு எழுந்தருள, அவ் விருதுகளைக் கலைப்பான் வேண்டிச் சைவர்கள் வாதமிட, அவ் வாதத்திற் கெதிருரை செய்து வெற்றி கொண்டமையால், அவ்வெற்றியைக் குறிப்பிடுவதற்கே இவ்வாறு குறித்திட்டாரானமையானும், 'கொற்றவேல்' என்பது 'வெற்றி பெற்ற வேலாயுதம்' என்று பொருள் படுகின்றமையானும், 'பரகாலர்' என்பது 'பரமதத்தினர்க்கோர் இயமன் போன்றவர்' என்று பொருள் படுகின்றமையானும்: அதாவது, பிறமதத்தினரை வென்று அன்னோர்க் கியமனாய் நின்று, அவருட் டலையாயினார்தம் வேலாயுதத்தை வாங்கிய காரணத்தால் "கொற்றவேற் பரகாலர்" என்று மங்கை நாட்டடிகள் அதே காலத்திற் பாடிய அதே பதிகத்தில், தம் விருதுப் பெயர்கள் தோன்ற உலகமறிய உரைத்தருளினாராகலானும், அத்தடை உள்ளீடில்லா வெறும் ஓட்டைக் குடுவையே யென்றொழிக. அதுவேயுமன்றி, இப்பதிகத்தைச் 'சங்கமுகத் தமிழ்மாலை' என்றமையால், 'நாற்கவிராயர்' என்ற ஆழ்வார்தம் விருது நன்கு நிறுவப்பட்டு, ஆழ்வார், தமிழ்மொழியில் வல்ல பெரும் புலவராய்ச் சைவரை வென்ற வொலியும், இப்பதிகத்தை ஓதுவோர் 'தலைவராவர்' என்றமையால், மற்று வேததத்துவ ஈச்வர நிர்ணயாதிகளிலும் அன்னோரைவென்று தலைமை பெற்ற வொலியும் கேட்கப்பட்டு இவ்வுண்மை விளங்குதல் அறிக. மேலும் மேற்குறித்த செய்யுள்களின் அமைதியும் நடையும் பொருளும், சம்பந்தர் தேவாரச் செய்யுள்களோடும் மங்கை நாட்டடிகள் பெரிய திருமொழிச் செய்யுள்களோடும் ஒன்றியிருக்கின்ற வாற்றினையும், இவ்விருவர்களது பிரபந்தங்களும் செந்தமிழ் வளந்துறும் செய்யப்பட்டிருக்கின்ற வாற்றினையும் ஆராய ஆராய இவர்கள் இருவரும் ஒரே காலத்தவர் என்பதூஉம் இவ்வரலாறு உண்மையேயாமென்பதூஉம் ஏற்படுகின்றன.

## நான்காம் மறம்.

இனி யாழ்வார் இவ்வெற்றி பெற்றதும், காழிச் சீராம விண்ணகரமிருந்தவாறே திருவாலி நகர் முதல் திருவெள்ளறை ஈறுகவுள்ள திருக்கோயில்களிற் சென்று இறைவன்மீது அகங்கெழுநிய அன்புமீதூரும் பாடல்களைப் பாடிக்கொண்டே திருவரங்கந் திருக்கோயிற் கெழுந்தருளி அரங்கநாதற்கு ஐந்து பதிகங்கள் ஓதியருளிய காலத்திருந்து, திருக்கோட்டியூர் எம்பெருமான்மேற் பாடிய பதிகக் காலம் வரைக்கு முள்ள கால வெல்லையிலே திருமங்கையாழ்வாரது நான்காவது மறம் நிகழ்கின்றது. இஃது திருவரங்கத் திருக்கோயிற் றிருப்பணி வேலையைப் பற்றியதாகும். இத்திருப்பணி

யையும் மறம் என்றதெற்றுக்கோ வெனின்: மற்றை ஆழ்வார்கள்போல் இவரும் திருக்கோயில்கடோறுஞ் சென்று திருப்பதிகங்கள் பாடியருளிய தோடு இவர் மட்டும் திருவரங்கத் திருப்பணி வேலையை மஹா வீர்யத்தோடு செய்ததமையா லென்க. திருமங்கையாழ்வார், சீனதேயஞ் சென்று அவ்விடத்துச் சிற்பியின்பால் அறியவேண்டியதெல்லாம் அறிந்து, சீனதேயத்தினின்று நாகப்பட்டினத் துறைக்கு வரும் கப்பலில் பாதிப்பிளவு பாக்கைப்போட்டு அதன் மூலமாக மிகு தந்திரமாய் அக்கப்பலில் உள்ள பாக்கு மூட்டைகளிற் பாதியைக் கொண்டு அவற்றை விற்ற பொருளையும், வாழைத் தண்டுகள் கொடுத்துச் சுழலும் சக்கரத்தை நிறுத்திப் பொன்னாலாய புத்த விக்கிரகத்தைப் பேர்த்தெடுத்து அதனை உருக்கி விற்ற பொருளையும், கமலாலயத்தினுள்ள குளத்தின் ஊற்றுக் கண்களை வரால் மீன்களை விட்டு அடைப்பித்து அக்குளத்திற்குப் படித்துறை கட்டுவித்து அதனால் சோழவேந்தன் உவந்து கொடுத்த பொருளையும் மொத்தமாக எடுத்துக்கொண்டுபோய்ப் பஞ்சபொதிகளால் திருவரங்க இராய கோபுரத்தின் விட்டைக் கல்லை ஏற்றுவித்துப் பின்னர் திருவரங்கத் திருப்பணி வேலையை முடித்தருளினார். இவ்வளவு கஷ்டப்பட்டு இக்கைங்கர்யத்தையும் முடித்தது ஒருபெரு வீரம் என்று சொல்லலாமன்றே! இத்திருப்பணியின் விவரங்களைக் கோயிலொழுகு முதலிய நூற்களிற் காணலாம்.

இவ்வாறு கட்டி முடித்ததன் பின் ஆழ்வார் மிகவும் தளர்ந்த வயதினர் ஆகின்றார். அதனாற்றான் பெரிய திருமொழியின் 10, 11-ம் பத்துகளில் உள்ள 184 பாசுரங்களும், ஒரே இடத்தில் இருந்துகொண்டே பொதுவாகப் பாடியருளப்பட்டு முடிவில்,

“அணியார் பொழில்சூ ழரங்க நகரப்பா !
துணியே னினிநின் னருளல்ல தெனக்கு
மணியே மணிமா ணிக்கமே மதுசூதா ;
பணியா யெனக் குய்யும்வகை பரஞ்சோதீ! ” என்றும்

“நந்தா நரகத் தழுந்தா வகைநாளும்
எந்தாய் தொண்ட ரானவர்க்கின் னருள் செய்வாய்
சந்தோகா! தலைவனே ! தாமரைக் கண்ணா !
அந்தோ வடியேற் கருளா யுன்னருளே ”—என்றும்

அரங்கநாதன் மேற்றாய் முடிகின்றன. மற்றும் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய ஐந்து பிரபந்தங்களையும், காழிச் சீராம விண்ணகர வெற்றிக்குப்பின், ஆழ்வார் தம்முடைய அருந் தமிழ்ப் புலமையும் பக்தி ரசமும் தோன்றவும், தம்மை யெதிர்த்த சைவர்களது கர்வ மொழியவும், ஒரே இடத்தில் இருந்துகொண்டே அருளிச் செய்திருக்கலாமென்று ஆராய்ச்சி முறையான் விளங்குகிறது.



இதுகாறுங் கூறியது கொண்டு, முதன் மறம் அரச வீரம் என்றும், இரண்டாம் மறம் கைங்கர்ய வீரம் என்றும், மூன்றும் மறம் சமய வீரம் என்றும், (அதாவது: ஆழ்வார், தம் சமயக் கொள்கையை நிலை நாட்டிய வீரம் என்க.) நான்காம் மறம் பக்தி வீரம் என்றும் அறிதற்பாற்று. ஏனைய ஆழ்வார்கள்போல் அல்லாது, இவர், ஒவ்வொரு செய்கைகளையும் பக்திமேற்றாய வீரத்தோடு புரிந்துவந்ததால் இக்கட்டுரை மங்கை மன்னன் மறம் என்றதென்க. இக்கட்டுரையிற் கூறவேண்டிய சில விஷயங்களை விரிவஞ்சி விடுத்தாம். அறிவுடையோர் நுட்பங் கண்டமைக.

மங்கை மன்னர் மாணடி வாழ்க.

# “சூத்ரன்” என்ற பதத்தைப் பற்றிய விசாரம்.

[வித்வான் ஸ்ரீ. T. S. நடேசசாஸ்த்ரிகள், ‘வால்மீகி’ மாயவரம்.]

சென்ற சில வர்ஷங்களாகத் தென்னிந்தியாவில் வகுப்பு வாரி ப்ரதிநிதித்வ விஷயமாயும் உத்யோக முறைமையிலும் ப்ராம்ஹணர்களிடம் த்வேஷங்கொண்ட ப்ராமணரல்லாத இந்துக்களில் சிலர் மநுஸ்ம்ருதியில் சூத்ரன் என்பதற்குத் “தேவடியாள் மகன்” “வேசிமகன்” என்று சொல்லி யிருப்பதாக ப்ரசாரம் செய்து, ஸாமாந்யர்களை வஞ்சித்து விஷமங்களைச்செய்துவருவது மன்றியில், மநுஸ்ம்ருதியைப் பஹிஷ்கரிக்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றியும், மநுஸ்ம்ருதி தங்கள் ஸ்வயமரியாதைக்கு இடந்தரவில்லையென்று சொல்லிக்கொண்டு சில கூட்டங்களில் மநுஸ்ம்ருதி புஸ்தகத்தைக் கொளுத்தியதாகவும் தெரிவதால், இதன் உண்மையைப்பற்றி இப்பொழுது சர்ச்சை செய்யவேண்டியது அவச்யமாயிருக்கிறது இதற்கு மநுஸ்ம்ருதியில் அடியிற் குறிப்பிட்டிருக்கும் எட்டாவது அத்யாயம் 415-வது ச்லோகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே காரணம்.

“த்வஜாஹ்ருதோ பக்ததாஸோ க்ருஹஜ: க்ரீததத்ரிமௌ ।
பைத்ரிகோ தண்டதாஸஶ்ச ஸப்தைதே தாஸயோநய: ॥”

இதன் அர்த்தம் —1. த்வஜாஹ்ருத; 2. பக்ததாஸ:. 3. க்ருஹஜ:, 4. க்ரீத:, 5. தத்ரிம:, 6. பைத்ரிக:, 7. தண்டதாஸ: என்று வேலைக்காரர்கள் ஏழுவகை.

மநுஸ்ம்ருதி சுமார் 55 வர்ஷங்களுக்கு முன் முதல்முதல் புதுவை நா. முத்து ரங்க செட்டியார் கேட்டுக்கொண்டபடி திருவயிந்திரபுரம் கோமாண்டூர் இளையவில்லி ராமாநுஜாசார்யாரால் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, பு. க. சுப்பராய முதலியாரால் பிழையறத் திருத்துவித்த சுத்த ப்ரதிக்கிணங்க ஷெ முத்துரங்க செட்டியார் ஸஹோதரராகிய முத்து கோவிந்த செட்டியாரால் சென்னை ஸ்ரீ பத்மநாப விலாஸ அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

இப் புத்தகம் வெளிவர நேரிட்ட வரலாற்றைப்பற்றி விசாரித்ததில், புதுச்சேரியில் ஷெ செட்டியார் ஒரு விசேஷ நஙிகர் என்றும், அவருடைய வீட்டில் ஒருவர் இறந்து போனகாலத்தில் தன் சொந்தச் செலவில் ப்ரசுரித்த ஷெ மநுஸ்ம்ருதி ப்ரதி ஒன்றும் ஒரு ரூபா தக்ஷிணையும் வந்த ப்ராம்மணர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார் என்பதாகத் தெரியவருகிறது. இதை மொழிபெயர்க்கக் காரணமாயிருந்த செட்டியாரும் அதைப் பிழை திருத்திய முதலியாரும் ப்ராம்ஹணரல்லாதார்கள். மநுஸ்ம்ருதி விஷயத்தில் அவர்களுக்கு எவ்வித த்வேஷமும் இருந்ததில்லை யென்றும், அப்படியிருந்தால் ஷெ செட்டியார் ஒருகாலும் இப்பெருங் கார்யத்தில் ஏராளமாகச் செலவுசெய்து இதை ப்ரசுரித்திருக்க மாட்டா ரென்பதுமே நமக்கு முதல் ருஜு.

பொதுவாக ஸம்ஸ்க்ருத பாஷையில் அதிக பரிசய மில்லாத அநேகருக்கு இந்தத் தமிழ்மொழிபெயர்ப்பு விசேஷ நன்மையைச் செய்துவந்திருப்பதாகவே சொல்லவேண்டும். ஸம்ஸ்க்ருதம் நன்கறிந்த ப்ராம்மண வித்வான்களுக்குத் தமிழ்ப் பாஷையில் அர்த்தத்தை உள்ளபடி வெளிப்படுத்தத் தமிழில் பூர்ண பாண்டித்யம் இருக்குமென்று இப்பொழுதும் கூட நினைப்பதற்கில்லை. இம்மொழிபெயர்ப்பு ஸம்ஸ்க்ருதம் கலந்த கொச்சைத் தமிழாகத்தா னிருக்கும். இந்தத் தமிழ்நடையைத் திருத்தி யமைப்பதற்காக ஏற்பட்ட சுப்பராய கவிராயர் ஷெ மொழிப்பெயர்ப்பில் பலவிடங்களில் அநேக ஸம்ஸ்க்ருத பதங்களை உச்சரிப்பும் அர்த்தமும் கெடும்படி செய்துவிட்டார். கொஞ்சம் ஸம்ஸ்க்ருத பாஷா பரிசய முள்ளவர்கள் மட்டுந்தான் இதைப் படித்து அவற்றின் அர்த்தத்தை அறிந்துகொள்ளக் கூடும்.

மொழிபெயர்த்தவர், அதன் முகவுரையில், குல்லூகபட்டீயம் கோவிந்தராஜீயம் மேதாதிதீயம் என்ற மூன்று வ்யாக்யானங்களை அநுஸரித்து அர்த்தம் செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இவர் மொழிபெயர்த்த காலத்தில் இந்த மூன்று வ்யாக்யானங்களைத் தவிர மற்றும் மநுஸ்ம்ருதிக்குள்ள இதர நான்கு வ்யாக்யானங்களாகிய ஸர்வஜ்ஞ நாராயணர் ராகவாநந்தர் நந்தநர் ராமசந்த்ரர் இவைகள் அவர் காலத்தில் ப்ரசுரிக்கப் படவில்லை. இந்த ஏழு வ்யாக்யானங்களையும் சேர்த்து ஒரே புஸ்தகமாய்க் கவர்னர் ஜெனரல் ஸபையில் மெம்பராகவும் இன்னும் C.S.I., M R. A. S., முதலான அநேக கௌரவப் பட்டங்கள் பெற்ற ஆனரபில் ராவ்ஸாஹேப் விச்வநாத நாராயண மண்டலீக சர்மா என்ற ப்ராம்மண கனவானுடைய பெரு முயற்சியால் 1886-ம் வர்ஷத்தில் பம்பாயில் நாகரலிபியில் அச்சிடப்பட்டது. இப்புத்தகம் தற்காலத்தில் கிடைப்பது அரிது.



விசேஷமாக எங்கும் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடிய குல்லூக பட்டருடைய வ்யாக்யானம் ஒன்றை மாத்ரம் தான் பெரும்பாலும் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

மேலேகண்ட ச்லோகத்தில் சொல்லிய ஏழுவகை வேலைக்காரர்களில் மூன்றாவதாகிய 'க்ருஹஜ' என்ற பதத்தைப்பற்றிய தமிழ் மொழிபெயர்ப்புதான் இவ்வளவு அநர்த்தங்களுக்கும் காரணமாக ஏற்பட்டது.

ஸர்வஜ்ஞ நாராயணர், 'க்ருஹஜ:' என்பதற்கு 'தாஸ்யாம்ஜாத:' [வேலைக்காரனிடத்தில் பிறந்தவன்] என்றும், 'பைத்ருக:' என்பதற்கு 'பித்ருதோ தாயபாகாதாகத:' [பிதுரார்ஜித சொத்திலிருந்து தன் வீதத்துக்கு பாக லப்தமாய்க் கிடைத்தவன்] என்றும் அர்த்தம் செய்கிறார். மற்ற வ்யாக்யாதாக்கள் 'பைத்ருக:' என்பதற்குப் 'பரம்பரையாய் வேலைசெய்து வருகிறவன்' என்ற அர்த்தம் செய்கிறார்கள். இந்த வார்த்தையின் அர்த்தத்தைப்பற்றி எவ்வித தகராறும் இல்லை. மற்ற ஐந்து வார்த்தைகளுக்கும் எல்லா வ்யாக்யாதாக்களும் சற்றேறக்குறைய ஒரேவித அர்த்தத்தைத்தான் சொல்லுகிறார்கள். இதிலும் எவ்வித தகராறும் இல்லை. இதன்படி ஷெ ச்லோகத்தின் அர்த்தம் என்னவெனில்:—"1. யுத்தத்தில் ஜயித்துக்கொண்டு வரப்பட்டவன், 2. பக்தியால் வந்தடைந்தவன், 3. வேலைக்காரன் மகன், 4. விலைக்கு வாங்கப்பட்டவன்; 5. ஒருவனால் கொடுக்கப்பட்டவன், 6. பாக லப்தமாய்க் கிடைத்தவன் 7. தான் கொடுக்கவேண்டிய கடன் தொகையை ஈடுசெய்வதற்காக வேலை செய்பவன், என்று வேலைக்காரர்கள் ஏழுவகைப்படுவர்." இதற்கு இன்னொரு விதம் அர்த்தம் சொல்வதானால் ஒருவன் மற்றொருவனுக்குக் கட்டுப்படுவதற்கு மேற் சொல்லிய ஏழு அவஸ்தைகளில் ஏதேனும் ஒன்றிருக்கவேண்டும். இந்த வ்யாக்யாநம் அக்காலம் மொழிபெயர்த்தவருக்குக் கிடைத்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்.

ராமசந்த்ரர், க்ருஹஜன் என்பவன் ஏழுவகை வேலைக்காரர்களில் ஒருவன் என்று மாத்ரம் சொல்லுகிறார். வேறு விசேஷ அர்த்தம் அவர் ஒன்றும் சொல்லவில்லை. மேதாதிதி, 'க்ருஹஜ:' என்பதற்கு 'க்ருஹே ஜாத:' (தன்) வீட்டில் பிறந்தவன்; 'தாஸ்யாமுத்பந்ந: க்ருஹதாஸ:' [தாஸியிடம் உண்டானவன்] என்றும் பிறப்பாலேயே தாஸன் என்றும், க்ருஹஜனுக்கும் மற்ற வேலைக்காரர்களுக்கும் வித்யாஸம் என்னவெனில், க்ருஹஜன் தன் தாஸியிடம் பிறந்தவனென்றும் மற்றவர்கள் காலக்ரமத்தில் வந்துசேர்கிறவர்களென்றும் சொல்லுகிறார்; ராகவாநந்தர், 'க்ருஹஜ:' என்பதற்கு 'தாஸ்யாம்ஜாத:' [தாஸியிடம் பிறந்தவன்] என்று சொல்லுகிறார். குல்லூகபட்டர், நந்தநர், கோவிந்தராஜர், இம்மூவரும் 'க்ருஹஜ:' என்பதற்கு 'தாஸீ புத்ர:' வென்று வ்யாக்யாநம் செய்திருக்கிறார்கள். மேலே சொல்லிய ஐந்து வ்யாக்யாதாக்களும், "தாஸி" என்ற வார்த்தை ஸம்பந்த முள்ள சற்றேறக்குறைய ஒரே அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய பதத்தையே சொல்லுகிறார்கள். இப்பொழுது 'தாஸ:' 'தாஸீ' இவ்விரு பதங்களின் அர்த்த விசாரம் செய்வோம். 'தாஸ:' என்பது புல்லிங்கம் (ஆண்பால்); இதற்கு 'தாஸீ' என்பது ஸ்த்ரீலிங்கம் (பெண்பால்). 'தாஸ:' என்ற ஸம்ஸ்க்ருத பதத்துக்கு 'வேலைக்காரன்' என்ற தமிழ் அர்த்தம். 'தாஸீ' என்கிற ஸம்ஸ்

க்ருத பதத்துக்கு 'வேலைக்காரி' என்பது பொருள். தேவதாஸீ என்றால் தேவரடியாள் (ஆலயத்தில் தொண்டுசெய்பவள்) என்று தமிழர்த்தம். தேவரடியாள் என்ற வார்த்தை தேவடியாள் என்று மருவி உபயோகத்தி லிருந்துவருகிறது. மேலே சொல்லிய ஏழு வ்யாக்யாநங்களிலும் தேவடியாள் என்ற அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய தேவதாஸீ என்ற பதம் இல்லவே இல்லை. 'தாஸீ' என்ற தனிப்பதமே இருப்பதால் அதற்கு வேலைக்காரி என்றே அர்த்தம். 'தாஸீ' என்பதற்கு "வேலைக்காரி, சூத்ரனுடைய மனைவி, செம்படவன் மனைவி, பலிபீடம், வ்யபிசாரி" என்ற அர்த்தங்கள் இருக்கின்றன.

குல்லூகபட்டர், நந்தநர், கோவிந்த ராஜர் இம்மூவருடைய வ்யாக்யாநங்களில் 'தாஸீபுத்ர:' என்ற ஸமஸ்தபதம் (compound word) உபயோகிக்கப்பட்டிருக்கிறது இதற்கு 'வேலைக்காரியின் மகன்' என்றே அர்த்தம். இதைப்பற்றி ஸந்தேஹமுள்ளவர்கள் தகுந்த ஸம்ஸ்க்ருத நிகண்டுகளை ஆராய்ச்சி செய்து பார்த்து உண்மை தெரிந்து கொள்ளட்டும்.

மநு, அத்யாயம் 8, ச்லோகம் 410-ல் 'தாஸ்யம் ஸூத்ரம் த்விஜந்மநாம்।' த்ரை வர்ணிகர்களுக்கும் அதாவது ப்ராஹ்ம, க்ஷத்ரிய, வைச்ய இம்மூன்று வர்ணத்தாருக்கும், ராஜா சூத்ரனைத் தாஸ்யம் (பணிவிடை) செய்யச் செய்யவேண்டியது.

மநு, அத்-2, ச்லோ-32.

'ஸர்மவத் ப்ராஹ்மணஸ்ய ஸ்யாத் ராஜ்ஞோ ரக்ஷாஸமந்விதம்।
வைச்யஸ்ய புஷ்டி ஸம்யுக்தம் ஸூத்ரஸ்ய ப்ரேஷ்ய ஸம்யுதம்॥'

இதற்குக் குல்லூகபட்டர் யமஸ்ம்ருதி வசநத்தையும் விஷ்ணுபுராண வசநத்தையும் அநுஸரித்து ப்ராம்மணனுக்கு சர்மா, க்ஷத்ரியனுக்கு வர்மா, வைச்யனுக்கு பூதி அல்லது குப்தன், சூத்ரனுக்குத் தாஸன் என்பதையும் சேர்த்துப் பெயரிடவேண்டுமென்றும் சொல்லுகிறார். இதனை, சுப சர்மா, பலவர்மா, வஸுபூதி, தீநதாஸன் என்னும் இப்பெயர்களால் அறியலாம்.

மநு, அத்-1, ச்லோ-91:—

'ஏகமேவ து ஸூத்ரஸ்ய ப்ரபு: கர்ம ஸமாதிசத்।
ஏதேஷாமேவ வர்ணாநாம் ஸுச்ரூஷாமநஸூயயா॥'

முதல் மூன்று வர்ணத்தாருக்கும் அஸூயையன்றியில் சுச்ருஷை செய்வதை ப்ரஹ்மா சூத்ரனுக்கு முக்யமான கர்மமாக ஏற்படுத்தினர். ஆகையால் "தாஸன்" என்பது சூத்ர வர்ணத்தார் யாவருக்கும் பொதுப் பெயர் என்றும், அவர்கள் முதல் மூன்று வர்ணத்தாருக்கும் தாஸ்யம் அல்லது சுச்ருஷை செய்ய வேண்டுமென்றும் ஏற்படுகிறது.



மற்றும், மநு ஸ்ம்ருதியில் இன்னும் அநேக இடங்களிலும் மற்றுமுள்ள ஸ்ம்ருதிகளிலும் சூத்ரன் என்ற பதம் காணப்படுகிறது. ஒரு இடத்திலாகிலும் சூத்ரன் என்பதற்குத் 'தேவடியாள் மகன்' என்றாவது 'வேசிமகன்' என்றாவது அர்த்தம் கிடையவே கிடையாது. மேற்கண்ட வ்யாக்யாநங்களில் சொல்லிய 'தாஸீ' என்ற பதத்துக்கு வீட்டில் வேலைசெய்யும் 'சூத்ர வேலைக்காரி' என்றுதான் அர்த்தம்.

ஆகையால் தகராறிலுள்ள 415-வது ச்லோகத்துக்கு மேற்கண்ட ஐந்து வ்யாக்யாநங்களையும் அநுஸரித்து அர்த்தம் என்னவெனில்:

"1. யுத்தத்தில் ஜயித்துக்கொண்டு வரப்பட்டவன், 2. பக்தியால் வந்தடைந்தவன், 3. (தன்) வீட்டிற் பிறந்தவன் அல்லது (தன்) வேலைக்காரி மகன், 4. க்ரயத்துக்கு வாங்கப்பட்டவன், 5. ஒருவனால் இனமாகக் கொடுக்கப்பட்டவன், 6. பாம்பரையாக வேலை செய்து வருகிறவன், 7. தான் கொடுக்கவேண்டிய அபராதம் அல்லது கடனுக்கு ஈடுசெய்வதற்கு வேலை செய்கிறவன் என்று வேலைக்காரர்கள் ஏழு வகைப்படுவர் என்பதாம்.

ஆகையால், இந்த ச்லோகமானது, ஒருவன் அன்னியனுக்குத் "தாஸ்யம்" [(bondage) கட்டுப்பட்டு வேலைசெய்தல்] இவ்வேழு வகைக்குள் ஒன்றாகத்தான் இருக்க வேண்டுமென்று நிரூபிக்க முன் வந்ததே யொழிய, "சூத்ர" என்ற சொல்லின் அர்த்தத்தை நிரூபிக்க வந்ததல்ல. மேற்கண்ட ச்லோகத்தின் அர்த்தத்தில் ந்யாயவாதிகள் எவரும் எவ்வித ஆக்ஷேபமும் சொல்ல முடியாதென்பது நிச்சயம்.

இதை மொழிபெயர்த்த ஐயங்கார் ப்ராம்மணன். அவர் சொல்லும் மூன்று வ்யாக்யாநங்களின்படி, 'த்வஜாஹ்ருத:' என்பதற்குக் குல்லூகபட்டரும் கோவிந்தராஜரும் சொல்லியது: 'தாஸீபுத்ர:'; மேதாதிதி சொல்லியது: 'தாஸ்யாம் உத்பந்ந:' என்பவைகளே. இவைகளை அநுஸரித்து வேறு ஸரியான வார்த்தை அவருக்குத் தோன்றாமல் ஸம்ஸ்க்ருதமும் தமிழுமாகக் கலந்து "தன்னுடைய தாஸிமகன்" என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். இம்மொழிபெயர்ப்பை ஸம்ஸ்க்ருதம் கலப்பில்லாமல் செந்தமிழ் நடையில் செய்வதற்கு ஏற்பட்ட சுப்பராய கவிராயர், எல்லோருக்கும் தெளிவாகத் தெரியச் செய்வதாக எண்ணி, 50 வருஷங்களுக்குப் பின் வரப்போகும் ப்ராம்மண த்வேஷத்தை அறியாமல், தன்னுடைய தாஸிமகன் என்பதை தன்னுடைய தேவடியாள் மகன் என்று திருத்திவிட்டார். இதனால்தான் இவ்வளவு அநர்த்தமும் வந்தது.

இது எதைப்போன்றதென்றால், சென்னையில் ஹாமில்டன் வாராவதி (Hamilton's Bridge) என்றிருப்பதை, ஜநங்கள் "அம்பட்டன் வாராவதி" என்று சொல்லி, அது வழக்கத்திலும் வந்து கடைசியாக, இப்பொழுது முனிஸிபல் ... Barber's



186287
JL
R65 ... N28-8-11

Bridge) என்று பெயர் கொடுத்துவிட்டதைப் போலிருக்கிறது. மேற்படி மநுஸ்ம்ருதி தமிழ் மொழி பெயர்ப்பில் மேற்படி சுப்பராய கவிராயரின் வேலையைப் பக்கம் தவறாமல் காணலாம்.

அன்றியும், 415-வது ச்லோகத்தில் "யுத்தத்தில் ஜயித்துக் கொண்டுவரப்பட்டவன்" என்று சொல்லியிருக்கிறது. ப்ராம்மணன் ஒரு காலத்திலும் ராஜாவாக இருந்ததில்லை. இவனுக்கு யுத்தத்தில் ஜயிக்கப்பட்டவன் எப்படி வேலைக்காரனாக ஆகக்கூடும்? இதை ஏன் ப்ராமண த்வேஷிகள் நினைத்துப் பார்க்கவில்லை? தவிர, 414, 415, 416 இந்த மூன்று ச்லோகங்களும் முதல் மூன்று வர்ணத்தாருக்கும் பொதுவேயொழிய, இவைகளில் ப்ராம்மணன் என்கிற வார்த்தையே கிடையாதென்பதை இப்பொழுதாவது விப்ர த்வேஷிகள் நன்கு படித்துப் பார்த்து, இனியாவது வீணுகத்தூற்றும லிருப்பார்களாக. வாதத்தை நீக்க மருந்துண்டு. 'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல்' ஏதோ ஒன்றை மனத்தில் வைத்துக்கொண்டு முகாந்தரமன்றியில் ப்ராம்மணர்களைத் திட்டுவது என்ற பிடிவாதத்தை நிவர்த்திக்க மருந்தே கிடையாது.

ஸந்தேஹத்தை நிவர்த்தித்துக்கொள்ள இஷ்டமுள்ளவர்களுக்கு ஷை 415-வது ச்லோகத்திற்கு அடியிற்கண்ட இரண்டு இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

(1) (By Manmatha Nath Dutt, M. A., author of English translation of 20 Smritis and other Sanskrit Works, 1909.

"A captive of war, a slave for maintenance, **the son of a female slave**, one purchased for money, a slave obtained as a present, a hereditary one, one condemned to slavery for any offence, these are the seven kinds of slaves (lit. the sources of slavery).

(2) (S. B. E. Vol. XXV, 1886, The Laws of Manu translated with extracts from seven commentaries by G. Buhler).

"There are slaves of seven kinds, (Viz) he who is made a slave under a standard, he who serves for his daily food, **he who is born in the house**, he who is bought and he who is given, he who is inherited from ancestors, and he who is enslaved by way of punishment."

———:0:———



ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1) மேல் நாட்டாரின் நாகரிகம்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

அமெரிகா தேசத்தில் கொலோராடோ (Colorado) என்னும் மாகாணத்தைச் சேர்ந்த டென்வர் (Denver) என்னும் பட்டணத்தில் இருக்கும் பென் லின்ஸெ (Ben Lindsey) என்னும் ஒரு ந்யாயாதிபதி தமது தேசத்துச் சிறுவர்களுடைய நடவடிக்கைகளைப் பற்றி இரண்டு புஸ்தகங்கள் எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறார். அவைகளுள் ஒன்றில், இக்காலத்திய சிறுவர்கள் தமது ஆசார வ்யவஹாரங்களில் தமக்குப் பரம்பரையாகக் கிடைத்திருக்கும் கட்டுப்பாடுகளை எப்படி அநாதரிக்கிறார்களென்றும், முக்யமாக விவாஹ ஸம்பந்தங்களான விஷயங்களில் தமது பூர்வர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்த நிர்ப்பந்தங்களை மிக்க வெறுப்புடன் பரித்யஜித்துத் தம்முடைய புத்திக்கு உசிதமாகத் தோன்றும் வேறு மார்க்கங்களை எப்படி அநுஸரித்து வருகிறார்களென்றும் விஸ்தாரமாக உபபாதிக்கிறார். இரண்டாவது புஸ்தகத்தில், அப்படி அச்சிறுவர்கள் போகும் மார்க்கத்தை சுத்தமாகத் தடுத்துப் பழைய மார்க்கத்தில் அவர்களைத் திருப்புவது அஸாத்யமான கார்யமாகத் தோன்றுவதால், அவர்கள் போகும் மார்க்கத்தையே எப்படி மஹாஜனங்கள் ஒருவாறு அங்கீகரிக்கலாமென்றும், அப்படி அந்த அங்கீகாரத்திற்கு இணங்கும்படி தேசத்திய சட்டத்தை எப்படி மாற்றலாமென்றும் விவரிக்கிறார். "Revolt of the youth" என்றும் "Companionate Marriage" என்றும் இப்புஸ்தகங்களுக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

இம்மாதிரியான புஸ்தகங்களை எழுத அவர் தகுந்த அதிகாரி என்றே நாம் அறிகிறோம். ராஜாங்கத்தில் அவர் வஹித்துவரும் அதிகாரம், சிறுவர்களுடைய நடவடிக்கைகளை உள்ளபடி அறிவதற்கு ஏராளமான அவகாசத்தைக் கொடுக்கின்றது. அந்தத் தேசத்தில் அம்மாதிரி ஒரு ந்யாய ஸ்தலம் இருக்கிறதாம். மற்றவர்களுக்குத் தெரியாமல் சிறுவர்களால் செய்யப்படும் ரஹஸ்ய வ்ருத்தாந்தங்களெல்லாம், அந்த ஸ்தலாதிகாரியால் விசாரிக்கப்பட்டு ஒருவித ஸமீகரணத்தை அடைய வேண்டியவையாக இருக்கின்றனவாம். ஆகையால், அவருக்குத் தெரியாமல் ஒரு வ்ருத்தாந்தமும் தவறிப்போவது ஸாத்யமில்லை. இதர மநுஷ்யர்களால் ப்ரக்ருத விஷயத்தின் வஸ்து ஸ்திதி எப்படி இருக்கின்றது என்று அறியக்கூடாவிடினும், இவருக்கு அது அறியப்பட்டே இருக்கும். தவிரவும், இவரை அறிந்தவர்கள் இவருடைய ஆர்ஜவத்தையும் சித்த ஔதார்யத்தையும் ஜனங்களிடம் மிக்க ஸௌஹார்த்தம் பொருந்தியிருக்கும் தன்மையையும் பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆகையால் இவர் எழுதுவதெல்லாம் விச்வாஸ பாத்ர மென்றே நாம் நினைக்கிறோம்.

அவர் எழுதுவது என்னவென்றால்—'இந்தத் தேசத்தில் ஸ்வல்ப காலமாய் யுவாக்களான ஜனங்களுக்குள், ஸ்த்ரீ புமான் அவர்களுடைய பரஸ்பர ஸம்பந்தம் இம்மாதிரியான விஷயங்களைப் பற்றிய ஸம்பாஷணைகளில் ஸங்கோசம் என்பது மிகவும் குறைவு அடைந்து வருகின்றது. போஜனம் விளையாட்டுக்கள் முதலிய விஷயங்களைப் பற்றி எப்படி நிஸ்ஸங்கோசமான வ்யவஹாரம் ஜனங்களுக்குள் பரஸ்பரம் லோகத்தில் காணப்படுகின்றதோ, அப்படியே வ்யவாயத்தைப் பற்றிய வார்த்தைகளும் நிஸ்ஸங்கோசமாக ஸம்பவிக்கின்றன. மற்றை விஷயானுபவங்களில் தாத்காலிக த்ருப்தியைத் தேடிக்கொள்வது எப்படி ஹேயமன்றோ, அம்மாதிரி ஸ்த்ரீ புமான்களுடைய ஸம்ஸர்க்க விஷயானுபவத்திலும் தாத்காலிக த்ருப்தியைத் தேடிக்கொள்வதில் எவ்வித தோஷமுமில்லையென்றே அவர்கள் நினைக்கிறார்கள். விவாஹ பர்யந்தம் ஸ்த்ரீகள் அக்ஷத யோநிகளாக இருக்க வேண்டுமென்னும் பண்டைக் காலத்திய நியமமெல்லாம் மாறி, தம் தமக்கு ப்ரியமான புருஷனையும் ஸ்த்ரீயையும் தாம் தாம் அபேக்ஷிக்கும் பொழுது ஸங்க்ரஹித்துக் கொள்ளலாமென்றும், அப்படி ஸங்க்ரஹித்துச் சேர்ந்து வஸிக்கும் காலத்தில் ப்ரஜைகள் ஜனிக்காமல் இருந்தால் அப்படி வர்த்திப்பதால் ப்ரத்யவாயமில்லையென்றும், இத்யாதியான புதிய பரிபாடிகள் நடவடிக்கைக்கு வருகின்றன. அப்படிச் சேர்ந்து வஸிக்கும் காலங்களில் ப்ரஜைகள் ஜனிக்காமல் இருப்பதற்காக என்ன என்ன உபாயங்கள் அபேக்ஷிதங்களோ அவை எல்லாவற்றையும் எல்லாரும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதம் ஸ்வைரமாக வர்த்திப்பதிலும் ப்ரஜோத்பத்தியை உபாயங்களால் தடுப்பதிலும் எவ்வித தோஷத்தையும் அவர்கள் பார்க்கிறார்களில்லை. யார் யாருக்கு எவரெவர்கள் ப்ரியமாக இருக்கிறார்களோ, அவரவர்கள் அவரவர்களுடன் விவாஹமின்றிக்கே சேர்ந்து வஸிக்கலாமென்றும், எப்பொழுதாவது பரஸ்பரம் அப்ரீதி ஜனிக்கும் பக்ஷத்தில் அப்பொழுதே அவர்கள் விலகி வேறு ப்ரீதி பாத்ரமானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் வஸிக்கலாமென்றும், இப்படிச் செய்வதில் எவ்வித தோஷமும் இல்லையென்றும், இத்யாதியான கொள்கைகளை அவர்கள் அவலம்பித்திருக்கிறார்கள். பாடசாலைகளில் படிக்கும் ஸ்த்ரீ புமான்களுக்குள் அதம பக்ஷம் பாதிப் பெயர்கள் இம்மாதிரியே வர்த்தித்து வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம்; பாடசாலைகளிலிருந்து வெளிப்பட்டவர்களுக்குள் இம்மாதிரி வர்த்திப்பவர்கள் பாதிக்கு மேலாகவே இருக்கும் என்பதில் ஸந்தேஹம் இல்லை. இந்த நடவடிக்கைகளில் புமான்களைக் காட்டிலும் ஸ்த்ரீகளே அதிக தைர்யத்துடனும் அதிக உத்ஸாஹத்துடனும் ப்ரவ்ருத்திக்கிறார்களென்று சொல்லக்கூடும்.

"Among the boys and girls there is complete frankness of speech on questions of sex, ample knowledge of methods of contraception and a new convention of sex-conduct. They accept love-making and "petting parties" as a natural pastime and they seek sexual excitement quite frankly with no feeling that it is "wrong". Of the High School boys and girls 45% on a conservative estimate have had intercourse with each other before they leave school and in the years following the proportion is much higher.

It is not the boy but the girls who set the pace. They are more frank and unabashed and far more deliberate...........They believe that it is



perfectly moral and proper to live with a boy whom you love without marriage provided you take care not to have children, that you should be faithful to such an arrangement while it lasts, but not be tied to it permanently unless both parties remain contented. On this basis hundreds and thousands of couples are now living and living not with any feeling of guilt or a sin, but in perfect inward content." ["Judge Lindsey's plea"—Mr. Strachey's article extracted in the Hindu of 16-7-28 ]

இப்படி இவர் சொல்வது வஸ்து ஸ்திதியாக இருக்கும் பக்ஷத்தில், ஜகத்தின் ச்ரேயஸ்ஸைப் பற்றி ஸாது ஜனங்களெல்லாருக்கும் மிக்க கவலை ஏற்படும் என்பதில் ஆக்ஷேபமில்லை. எவ்விடத்திலோ யாரோ ஸ்வல்ப ஜனங்கள் இம்மாதிரி வர்த்திப்பதைப் பற்றி நாம் சோகப்படுவானேன் என்று கேட்கலாம். அப்படி இது அநாதரிக்கத் தகுந்ததாக நமது புத்தியில் தோன்றவில்லை. இந்தப் பரிபாடி பரவிவரும் இடம், நாகரிகத்தில் மிகச் சிறப்பு அடைந்துள்ள அமெரிகா தேசம். அந்தத் தேசவாஸிகள் தனத்திலும் பலத்திலும் பெருத்தவர்கள்; நாகரிகத்திலும் சிறந்தவர்களென்பது பஹுஜனங்களுடைய அபிப்ராயம். ப்ராயேண அவர்களைப் பார்த்தே மற்றைத் தேசத்து ஜனங்கள் தங்கள் நாகரிகத்தைச் சீர்திருத்தம் செய்து கொள்ளுகிறார்கள். அமெரிகா தேசத்திய நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் இங்கிலாந்தியர்களும் மற்றை ஐரோப்பியர்களும் ஒரு விதகௌரவத்தைக் கொடுத்து வருவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது அமெரிகா தேசத்தில் நடைபெறும் மாறுதல்கள் இன்னும் இரண்டொரு தலைமுறைகளுக்கு இம்மாதிரியே நடைபெற்று வந்தால் இந்தப் புதிய ஆசாரம் ஐரோப்பியர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஐரோபா தேசங்கள் எல்லாவற்றிலும் பரவிவிடும் என்பதில் ஆக்ஷேபமில்லை. அப்படிப் பரவினால் அது நமது தேசத்திற்கு வராமலும் நிற்குமோ? இப்பொழுதே நமது தேசத்திய சீர்திருத்தக்காரர்களெல்லாரும் ஐரோப்பியர்களுடைய அநுஷ்டானத்தைப் பார்த்து அதற்கு ஒத்துவரும்படி நம்முடைய அநுஷ்டானங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். அந்த மாதிரி மாறுதல்களும் அநேக அம்சங்களில் நிறைவேறி வருகின்றன. ஸ்த்ரீகளுக்கு உயர்ந்த பூஷணமாக நமது பெரியோர்களால் கொண்டாடப்பட்டு வந்த நாணம் அச்சம் முதலிய எல்லாம், இந்தச் சீர்திருத்தக்காரர்களுடைய முயற்சியின் பலமாகக், குறைவுபட்டுவருகின்றன. புமான்கள் கூட்டமாக இருக்குமிடங்களில் ஸ்த்ரீகள் ஸ்வாதந்த்ரியத்துடன் செல்வதும், அவர்களுடன் சேர்ந்து படிப்பதும், அவர்கள் செய்யும் உத்யோகங்களில் இவர்கள் ப்ரவ்ருத்திப்பதும், இவையெல்லாம் இப்பொழுது ஸஹஜமான வ்யாபாரமாகி விட்டன. இம்மாதிரியே, இப்பொழுது ப்ரஸ்தாவிக்கப்பட்டுவரும் புதிய மாறுதல்களும் நமது தேசத்தில் ப்ரவேசித்து விடுமென்றே நாம் பயப்படுகிறோம். இது கால விபரிணாமமாக இருந்த போதிலும், நாம் இது விஷயத்தில் உதாஸித்து இராமல் யதா சக்தி இதைத் தடுப்பதற்கு ப்ரயத்னப்பட வேண்டுமென்றே இவ்விடத்தில் இதைப்பற்றி ப்ரஸ்தாவிக்கத் துணிந்தோம்.

மதிராஸ்
1—8—28.

ஒரு தேசாபிமானி.

## ௨. ஆர்யர்களின் துர்த்தசை

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

[illegible] ।
[illegible] ॥

கலிபுருஷனின் விஹாரமஹிமையினால் ஸாதுக்களுக்கும் தர்மத்துக்கும் தற்கா லம் சோதனைகாலம் ஏற்பட்டிருக்கிறது. அதர்மத்திற்குப் போஷகரவும் துஷ்டர்களு க்கு உக்கதன் தாசமும் தினந்தோறும் அபிவிருத்தியாய் வருகின்றன. வேதங்கள் நிர் வேதத்தை அடைகின்றன. புராணங்கள் தூஷிக்கப்படுகின்றன. வர்ண ஸாங்கர்யம் அதிகரித்துவருகிறது. பொதுவாக ஆர்யமதமே அவமதிக்கப்பட்டு வருகிறது. அதை அநுஷ்டிப்பவர்களில் முக்ய பூதர்களான ப்ராஹ்மணர்கள் பெரிய நிந்தைக்கு ஆளாகி வருகிறார்கள். அதற்கான காரணங்களும் ப்ராஹ்மணர்களிடையே இல்லாமலில்லை. இவ்வித நிலைமையில் ஆர்யதர்மத்தைக் காப்பாற்றுவது எப்படி என்கிற பெரிய ப்ரச்னை கிளம்புகிறது. இப்ரச்னையைக் காதில் வாங்குவாரே இல்லை. நான்கு வர்ணங்களிலும் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ப்ராஹ்மணர்களும் தற்காலம் தங்கள் ஜாதி தர்மத்தையும் ஆத்மார்த்தத்தையும் அடியோடு மறந்து, சரீர தர்மமே பெரிதென்றெண்ணி, அர்த்த காம பரர்களாகித் தத்வஜ்ஞாந சூந்யர்களாய் க்ருத்யா க்ருத்ய வ்யவஸ்தையின்றி இழி தொழில்களில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்தோ பரி தாபம்!! விச்வாமித்ரரைத் தமது ப்ரஹ்ம தேஜஸ்ஸினால் ஜயித்த வஸிஷ்ட குலத்தி லும், இன்னும் இதர மஹா தேஜோவான்களான மஹர்ஷிகளின் வம்சத்திலும் பிறந்த நாம் இக்கதிக்கு ஆளாகி விட்டோமே! இதற்கென் செய்வது? இதற்கு என்ன பரி ஹாரம் தேடப்போகிறோம்? இச்சமயத்தில் பகவான் கருணை புரிந்து ஒரு அபிநவாவ தாரம் செய்தால் இவைகளைச் சீர்திருத்தமுடியும். கல்க்யவதாரத்துக்கு முன் பகவதவ தாரம் இருப்பதாக ப்ரமாணங்கள் கூறவில்லையே. ஆகையால் நமக்கு நாமே தான் சீர் திருத்த வேண்டும். அதற்கென்ன வழி என்பதை, சென்ற ஆனிமாதத்து ஸஞ்சிகையில் வித்வான் காரப்பங்காடு ஸ்ரீமான் வெங்கடாசார்ய ஸ்வாமி "ஒரு விண்ணப்பம்" என்கிற தலைப்பின் கீழ் அழகாக உபந்யஸித்திருக்கிறார். அதைக் கண்டு நான் பெரிதும் ஸந் தோஷமடைந்தேன். நமக்குள் ஒற்றுமைப் பட்டுத் தற்கால ரீதிக் கேற்ப சில சாஸ்த்ரா விருத்தங்களான சீர்திருத்தத்தை ஏற்படுத்திக் கொள்ளாவிடில் சீக்ரத்தில் நமது ஸமூஹமே அடியோடு மறைந்து விடு மென்பது எனது அபிப்ராயம். அதற்குக் கார ணங்களை அந்த ஸ்வாமியே நன்றாக வர்ணித்துச் சொல்லியிருக்கிறார். நான் மறுபடியும் அதை வர்ணிப்பதென்றால் கூறியது கூறல் என்கிற தோஷம் வரும் என்று நினைத்துக் கூறாது விடுத்தேன். ஆகையால், இதைக் கண்ணுறும் ஆர்ய மதாபிமானிகள் அனை வரும் ஒரு மஹா ஸங்கம் சேர்ந்து ஆர்யர்கள் உய்யும் வகையைக் கண்டு பிடித்து உதவ வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன்.

பெ. வ. ஸ்ரீநிவாஸன்,
[சொரையூர்]

15—8—28.



## (௫) ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஒற்றுமை.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு.—

தாங்கள் ஆடிமாஸத்து ஸஞ்சிகையில் எனது லேகநத்தில் கண்டிருக்கும் விஷயமாக ஸமாதாநம் சொல்லி யிருப்பதைப் பார்வையிட்டேன். தங்கள் அபிப்ரா யாநுஸாரம் சற்றுப் பராமர்சித்ததில் தெளிந்ததை ஸவிநயம் தெரியப்படுத்திக் கொள் கிறேன்.

1. ஆகமங்கள் வேத விருத்தங்களென்று சொல்வது சரியல்ல வென்றும், அது விஷயமாக யாமுநாசாரியர் நிர்ணயம் செய்திருப்பதாயும் சொல்லுகிறீர்கள். ஆகமங் கள் வேத விருத்த மில்லாமலும் அநுஷ்டாநத்திலு மிருந்துவரும் பக்ஷத்தில் ஆகமப்ரா மாண்யம் என்ற க்ரந்தம் தான் எதற்காக ஏற்படவேணும். பிற்பாடு 'பாஞ்சராத்ரரக்ஷை' என்னும் மற்றொரு க்ரந்தம் வேதாந்த தேசிகன் செய்திருக்கவேண்டிய அவசியம்தான் என்ன? ப்ராமாண்யமும், ரக்ஷையும், ஏற்பட்ட திலிருந்தே ஆகமம் வேத விருத்த மென்றும் அநுஷ்டாநத்தில் இல்லாமலிருந்த தென்றும் தெரியவருகிறது. வைஷ்ண வர்களாகிய நமக்கு அபிமானத்தால் ஆசார்யன் சொல்வது ப்ரமாண்யமாய்த் தோன்றினபோதி லும் அது புதிதாக அநுஷ்டாநத்தில் கொண்டுவரப்பட்டதென்றே தெரியவருகிறது. புதிதாக அநுஷ்டாநத்தில் எதைக் கொண்டுவரும்பொழுதும், அபிப்ராய பேதங்களும் அத்தால் ஸமூகத்தில் பிரிவுகளும் ஏற்படுவது ஸஹஜமே. அதுபோல் ப்ராஹ்மணர் களுக்குள்ளும் இவை ஏற்பட்டிருக்கலாம். மேலும் சைவாகமங்கள் வேத விருத்தங்க ளென்று வைஷ்ணவர்கள் சொல்லிக் கொள்வது ஸாதாரணமாக இருக்கிறது. ஒரு ஆக மம் அவைதிகமானால் மற்றொன்றும் அதுபோல் ஆகாதோ என்பதைச் சற்று ஊன்றிப் பார்க்க வேண்டும். இப்படிக்கெல்லா மிருந்தபோதிலும் ஆசார்யன் சொல்லியிருப்பது போதமான ப்ராமாண்ய மென்று தாங்கள் சொல்லி விட்டபடியால் இதை இத்துடன் விட்டுவிட வேண்டும்.

2. ஆழ்வார்களுடைய ஸூக்திகளுக்கு ப்ராதாந்யம் கொடுத்திருப்பது வேத விரோத மாகுமோ என்கிறீர்கள். ப்ராஹ்மணர்கள் வைதிக கர்மாநுஷ்டாநங்களில் ஸமஸ்க்ருத பாஷை உபயோகப்படுத்தி வருவது அநாதியான வழக்கம். அப்படியிருக்க, பிரபந்தங்களைச் சிலவிடங்களில் நுழைப்பதும் அவைகளை உபய வேதாந்தமென்று நாம கரணம் பண்ணி அத்யயனம் பண்ணுவதும் வேத விரோதமாகாதோ? அப்படியானால் பாஷாந்தரங்களில் எழுதப்பட்டிருக்கும், ரிக்வேதாதிகளையும் வேதஸமானங்களென்று ஒருவர் சொல்வதாக இருந்தால், அது ஆதரணீயமாகுமோ? அப்படி ஸ்வீகரிப்போமா னால், இதற்கு அவஸாநம் எங்கே? ஸம்ஸ்க்ருத பாஷையைத் தவிர்த்து இதர பாஷைகளில் வேதங்களை அத்யயநம் பண்ணுகிற ப்ராஹ்மணன், அநேக ஜன்மங்களில் நரகத்தை அடைவான் என்ற சேஷதர்ம வாக்யத்தைக் காண்க.

3. பாஞ்ச ராத்திரத்திற்கு ப்ராதாந்யம் கொடுத்தது ராமாநுஜர் அல்லவென் றும், வ்யாஸமஹர்ஷி அதைபற்றி ப்ரஸ்தாவித்திருப்பதாகவும், அந்தக காலத்தில் ப்ராஹ் மணர்களுக்குள் கலஹம் ஏற்பட வில்லை என்றும் சொல்லுகிறீர்கள். பாஞ்சராத்

திரமோ, அல்லது மற்ற ஆகமங்களோ, முன் இருந்து வந்திருக்கிறதென்பது தெரிந்த விஷயமே. ஆனால் அவைகள் அநுஷ்டானத்தில் இல்லை. ஒருஸமயம் அவை அநுஷ்டானத்திலிருந்ததாக வைத்துக்கொள்வோமானாலும், அஹங்கார ப்ரேரிதங்களான பாத்திரம் முதல் தீர்த்தம் முதலிய பர்யாதாபாஸங்கள் புண்ட்ராதி பேதங்கள் முதலியவை இல்லாமலிருக்கலாம். ஸ்ரீ உப. வெங்கடாசாரியர் ஸ்வாமி, ஆசார்யப்ரயுக்தமாகவும், ஸம்ப்ரதாய ப்ரயுக்தமாகவும் ஏற்பட்டிருக்கும் அநுஷ்டான பேதங்களால் வைஷ்ணவர்களுக்குள் ஸ்பர்த்தை வ்ருத்தியாகி வருவதைக் கண்டு சோகித்து எழுதியிருந்தபடியால், நானும் அதன் காரணங்களைக் கண்டு எழுதும்படியாக நேரிட்டது. தான் ப்ராஹ்மணன், தான் வைஷ்ணவன் என்ற இரண்டு எண்ணத்தையும் மறந்து, தன் ஸம்பிரதாயம், தன் ஆசார்யன் அநுஷ்டானம், என்ற எண்ணங்களை ப்ரதானமாகக் கருதி வ்யவஹரிக்கும் வரையில், வைஷ்ணவர்களாகிய நம்முடைய இப்பொழுதைய சித்த வ்ருத்தி மாறுதல் அடையுமென்பதைச் சிந்திக்கவேண்டாம்.

4. ஒற்றுமைக் குறைவுக்குக் காரணம் காமக்ரோதாதிகளென்றும் அநுஷ்டான பேதமல்லவென்றும் சொல்கிறீர்கள். உலகத்தில் ஸ்பர்த்தைக்குக் காரணம், காமக்ரோதங்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், காமக்ரோதாதிகள் ஒரு காரணமில்லாமல் ப்ரவ்ருத்திக்கமாட்டா. அதற்கு, அநுஷ்டான ஸம்பிரதாய பேதங்கள் காரணவிஷயமாக இருந்து வருகின்றன.

5. அநுஷ்டான பேதமில்லாதவிடங்களில், ஒற்றுமைக் குறைவு இருந்து வருவதாகவும், பேதம் இருக்கையிலும் ஸத்துக்களுக்குள் ஒற்றுமை குறையாமலிருந்து வருவதாகவும் சொல்லுகிறீர்கள். அதன் காரணம் சற்று யோஜித்துப் பார்க்கத் தெளியும். அதாவது, அநுஷ்டான பேதங்கள் பாராட்டாத தேசங்களில், ஒற்றுமையில்லாமைக்குக் காரணம், அவர்களுக்கு அந்ய தேசத்தாருடைய யோகக்ஷேமங்களிலிருக்கும் அஸூயையே; அந்த அஸூயையால் ராகத்வேஷங்களை வ்ருத்தி பண்ணிக்கொண்டு, மதமாத்ஸர்யங்களை அடைந்து வருகிறார்கள். அத்தேசங்களிலும் மதாநுஷ்டான விஷயம் கவனிக்கப்பட்டு வந்த காலங்களில் அநேக தீவ்ரமான த்வேஷம் ஏற்பட்டு பரஸ்பரம் ஹிம்ஸை செய்து வந்திருக்கிறார்களென்பது சரித்திர ப்ரஸித்தம். நாமோ என் ஆசார்யன், என் ஸம்பிரதாயம் என்ற அஹங்கார மமகாரங்களால், த்வேஷத்தை வளர்த்து மாத்ஸர்யத்தை அவலம்பித்து வருகிறோம். நாம் நமக்குள் மித்ரபேதம் பண்ணி வருகிறோம். அவர்கள் அந்ய ராஜ்யத்தாருடன் மித்திர பேதம் பண்ணிவருகிறார்கள். குணதோஷங்களில் இரண்டும் ஸரியே. அதில் ஒன்றுக்கொன்று தாரதம்யம் சொல்வதற்கில்லை. ஸத்துக்களுக்குள் அநுஷ்டான பேதமிருந்தபோதிலும், ஸ்நேஹம் குறையாமலிருக்கக் காரணம், அவர்களுடைய ஸாத்விக ஸ்வபாவமே. அவ்விதமான, ஸாதுக்கள் துர்லபமாக இருக்கிற இந்த காலத்தில் அதை ப்ரஸ்தாவிப்பதில் ப்ரயோஜனமில்லை.

6. ப்ராஹ்மணர்களுக்குள் ஒற்றுமைக்காக அநுஷ்டானங்களை விட்டு விடுவது உசிதமாகாதென்றும், அப்படியானால் ப்ராஹ்மண அப்ராஹ்மண ஒற்றுமைக்காக ப்ராஹ்மண தர்மத்தை விடும்படி ப்ரஸங்கிக்குமென்றும் சொல்லுகிறீர்கள். இது தங்களுடைய ஊஹமே தவிர எனது அபிப்பிராயமாகாது. ப்ராஹ்மண தர்மம், எல்லா



ப்ராஹ்மணர்களுக்கும் பொதுவாக இருந்து வருகிறது. ஸம்ப்ரதாயாநுஷ்டானங்கள் அதை ஒப்புகொண்ட சில ப்ராஹ்மணர்களுக்குள் இருந்துவருகின்றன. ப்ராஹ்மணன் தர்மாநுஷ்டானங்களை விட்டால் பதிதனாவான். ஸம்ப்ரதாயாநுஷ்டானங்களை விட்டால் பதிதனாகமாட்டான். ப்ராஹ்மண கர்மாநுஷ்டானங்கள் பகவானுடைய நியமனம். அவற்றை நிர்ப்பந்தமாகச் செய்து தீரவேண்டும். ஸம்ப்ரதாயாநுஷ்டானங்கள் அபிமான பக்ஷம்; அதனால்தான், புதிது புதிதாக ஆசார்யாநுஷ்டானங்களும் ஸம்ப்ரதாயங்களும் ஏற்படுகிறதற்குக் காரணமாகிறது. தாங்கள் இந்த விஷயத்தைச் சற்று பராமர்சிக்க ப்ரார்த்திக்கிறேன். கலியுகத்தில் ஸங்கத்தால் சுத்தம் கெடுமென்று ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்தக் காலத்து ப்ராஹ்மணர்கள், இதர ஜாதியாருடன் க்ரமத்துக்கு அதிகமான ஸஹவாஸம் வைத்துக்கொண்டிருப்பதே, அவர்களுடைய கர்மாநுஷ்டான லோபத்திற்குக் காரணம் என்பது எனது அபிப்பிராயம். அப்படியிருக்க, அவர்களுடன் ஒற்றுமைக்காக ஸ்வதர்ம பரித்யாகம்செய்ய, நாம் விரும்பக்கூடுமோ என்பதைத் தாங்கள் சற்றுக்கவனிக்கவேணும். நான் முன் எழுதியதைப்பார்த்ததிலிருந்து தாங்கள் என்னை இந்தக்காலத்து அபிப்ராயத்தைச் சேர்ந்தவனாக எண்ணிவிட்டீர்களென்று தோன்றுகிறது. நான் காங்கிரஸ் அபிமானியோ, அல்லது ஸாமூஹ்ய பரிஷ்காரியோ, ஆர்ய ஸமாஜியோ, அல்லது அவற்றைப் போன்ற கக்ஷிகளைச் சேர்ந்தவனென்றோ எண்ணவேண்டாம். நான் ஸ்வதர்மாநுஷ்டான நிரதனாய் யதா சக்தி ஸர்வதா ஸர்வபாவேன பகவத் பக்தி பண்ணிக்கொண்டு ப்ராணயாத்திரை பண்ணிவரும் அஜ்ஞாததசையிலிருக்கும் ஓர் ஜீவாத்மா. என்னிடம் நவீன நாகரீகமென்ற மனோவ்யாதி புகுந்திருப்பதாகத் தாங்கள் கொஞ்சமேனும் ஸம்சயப்படவேண்டாம்.

7. கடைசியாக, வைஷ்ணவர்களுக்குள் கலஹத்தை நிவர்த்தி பண்ணக் கூடிய உபாயங்களை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டியது அவச்யம். அதற்கு உபாயங்கள் காமக்ரோதாதிகளை ஒடுக்குதல் ஒன்று; ஆசார்ய ஸம்ப்ரதாயாநுஷ்டானங்களில் உதாஸீநபாவம் வரும்படி செய்தல் மற்றொன்று. இவைகளில் காமக்ரோதாதிகள் ஒவ்வொருவருக்கும் ஜந்மாந்தர ஸம்ஸ்காரத்தால் ஸ்வபாவமாக இருந்து வருகிறது. அதை ஒடுக்கப் போதுமான ஜ்ஞானம் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் பக்ஷத்தில்தான் ஸாத்யமாகும். ஸம்ப்ரதாயாநுஷ்டானங்களில் உதாஸீநத்தை உண்டு பண்ணுவோமென்றால், அதில் வைஷ்ணவர்களாகிய நமக்கு எல்லோருக்குமிருந்துவரும் விசேஷ அபிமானம் நம்மை அசக்தர்களாகச் செய்து வருகிறது. இந்த ஸ்திதியில் நாம் செய்ய வேண்டியது என்னவெனில், எல்லா வைஷ்ணவர்களுடைய புத்தியும் ஒற்றுமை உண்டாக வேண்டிய மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி செய்யப் பகவானை நிரந்தரம் ப்ரார்த்தித்துத் தற்காலம் விரமிக்க வேண்டியது; அல்லது ஸம்ப்ரதாயநுஷ்டானங்கள் பரம்பரையாக வந்தவையென்றும் ச்லாக்யமென்றும் அபிமானித்து வருவதுபோல், கலஹங்களும் பரம்பரையாக வந்தவையென்று அபிமானித்து, அக்கலஹங்கள் ஆங்காங்கு உண்டாகிறவைகளைக் கண்டும் கேட்டும் ரஸிக்கவோ சோகிக்கவோ செய்யவேண்டியது.

நாகபட்டணம்
20—8—28

பி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

(4)

## ஸ்ரீ வைஷ்ணவ வித்வத் ஸபை.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு,—

பெருமாள் கோயில் [காஞ்சீபுரம்] ப்ரதிவாதி பயங்கர மடாதிபதி—ஸ்ரீமத் அநந்தாசார்ய ஸ்வாமிகளின் முயற்சியால் ஷெடி ஸபை காஞ்சீபுரத்தில் நடைபெறும் விஷயம் ஏற்கெனவே தீபிகையில் பிரசுரமாயிருப்பதால் அனைவருமறிந்ததே. விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தில் வாத ப்ரதிவாத ரீதியில் கோடி க்ரமங்கள் சொல்லி மதாந்தரங்களைக்கண்டித்து ஸித்தாந்த ஸ்தாபநம் செய்யக்கூடிய வித்வான்களை அபிவிருத்தி செய்ய வேணுமென்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு முதன் முதலாக ஸ்ரீ ஸ்வாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வித்வத் ஸபை சென்ற ஆடி மாதம் 26உ முதலாக ஆறு நாட்களில் இடையூறின்றி நடைபெற்றது.

இந்த ஸபை இவ்வருஷமே புதிதாகத் தொடங்கப் பட்டபடியாலும், கோடி க்ரமங்கள் சொல்லத் திறமை பெற்ற வித்வான்களுக்கு மாத்திரமே இதில் ப்ரவேசம் உரியதாயிருந்தபடியாலும், சில நாட்களாகக் காஞ்சீபுரம் ஸமீபத்தில் ஏற்பட்ட ரெயில்வே போக்கு வரத்து ஸௌகர்யக் குறைவினாலும் இவ்வருஷம் ஷெடி ஸபைக்கு ஸுமார் 15 வித்வான்களே எழுந்தருளி யிருந்தார்கள்.

பிரதிதினமும் பகல் 2-மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டு வந்தது. ஸபையின் கார்யக் கிரமம் இருவகையாக வகுக்கப்பட்டது. அதாவது—வித்வான்களுக்கே உரிய வாத கோஷ்டி நடத்துதல் ஒன்று; ஸர்வ ஜனங்களுக்கும் உபயுக்தமாம்படி தர்ம ஸம்பந்தமான உபந்யாஸங்கள் நடத்துதல் மற்றொன்று. இவ்விதமாகவே ஆறு நாளும் வாக்யார்த்த கோஷ்டியும் உபந்யாஸ கோஷ்டியும் அழகாக நடந்தன. இரண்டு மணி முதல் ஐந்து மணி வரையில் வாக்யார்த்த கோஷ்டி ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஸ்தான மடத்திலும், அதற்குமேல் 7 மணி வரை உபந்யாஸ கோஷ்டி ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா ஸந்நிதியிலும் நடத்தப்பட்டு வந்தது.

கூடியிருந்த வித்வான்கள் பல மதங்களில் பல விஷயங்களைப்பற்றி வாக்யார்த்தங்கள் நடத்திப் பரமாநந்த மடைந்தனர்.

இரண்டாம் நாளில் சென்னை. வி வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் (B. A. B. L.) ஸ்வாமி ஷெடி ஸபைக்கு எழுந்தருளி யிருந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் அரிய பெரிய அமுத மொழிகளைப் பருகி தாமும் அருமையான சில அபிப்பிராயங்களை வெளியிட்டு ஸபையார்களை மகிழ்வித்தார்.

மறுநாள் ஸ்ரீமான் உ. வே. திவான் பஹதூர் டி. ரங்காசாரியர் ஸ்வாமியும் ஸ்ரீமான் ஆநந்தா ப்ரஸ் தலைவர் ராவ்பஹதூர் வேலூர் ரங்கநாதம் செட்டியாரும் ஸபைக்கு விஜயம் செய்திருந்தனர். ரங்காசாரியர் ஸ்வாமிகள் ஸபையிலிருந்த ஒவ்வொரு வித்வான்களையும் தனித்தனி ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி ஸாரமாக ஸம்ஸ்கிருதத்தில் உபந்யஸிக்கும்படி கேட்டுக்கொண்டதின் மேல் அப்படியே அனைவராலும் உபந்யஸிக்கப்பட்டதில் ஸபைக்கு அது வொரு விசேஷித்த ஆநந்தமாக அமைந்தது.

இவ்வண்ணம் பரமாநந்தமயமாக நடைபெற்ற இந்த வித்வத் ஸபையில் வாக்யார்த்த கோஷ்டியிலும் உபந்யாஸ கோஷ்டியிலும் ஸ்ரீ ஸ்வாமிகளின் நிகரற்ற திறமையைக் கண்டு உகப்பும் வியப்பும் அடையாதாரில்லை.

ஸபை முடியும் தினத்தில் கீர்த்தி பெற்ற நேபாள ராஜாவின் தலைமை மந்திரி பெங்களூரிலிருந்து விஜயம் செய்திருந்து ஸபையில் கலந்து களித்து ஸ்ரீ ஸ்வாமிகளின் அநுக்ரஹத்துக்கு இலக்காகிச்சென்றார்.

ஸாமாந்ய சாஸ்திரங்களிலும் வேதாந்த ஸம்ப்ரதாயங்களிலும் வல்லமை பெற்ற வித்வான்களுக்கும் பரமோபகாரமாயுள்ள இந்த வித்வத்ஸபை நீடூழிவாழவேணுமென்ற கர கோஷங்களுடன் 15-8-28உ இரவு 8 மணிக்கு வித்வத் ஸம்மானம் நடந்து தலைகட்டியது.

காஞ்சீபுரம் }
26-8-28 }

ப்ர. அண்ணங்கரார்ய தாஸன்.

ஸ்ரீ:

॥ ஸ்ரீ ஈதே ஐஸ்ஸ்ரீகரவிம்ஶவாரஸ்ரஹணே தத:॥

பொடஜ: ப்ரவிஶ்ய ஶஶ வாசகிரோ ப்ரவஸ்தூரம்
ஸஞ்ஜீவயத்யவிஶ்ருஸக்தியா: ஶ்ரேயா ஹா ।
அகத்யாம்ஸு ஸஹஸ்த்ரசரணப்ரவணஸமாதீநு
ப்ராணாஸ்ரோ ஸுமவதே வாரயோஷாய தாஸ்மை ॥

## பத்ராதிபரின் குறிப்புகள்.

சென்ற ஸஞ்சிகையில், நாகப்பட்டணம் ஸ்ரீபாத பி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்னும் தீபிகா ஸஹ்ருதக்களுள் ஒருவர் தீபிகைக்கு நியமித்திருந்த ஸ்ரீமுகத்தின் விஷயத்தை ஸங்க்ரஹித்து, அந்த விஷய ஸம்பந்தமாக நமக்குத் தோன்றின குண தோஷங்களை நாம் தீபிகா த்வாரா விஜ்ஞாபநம் செய்துகொண்டிருந்தோம். நாம் விஜ்ஞாபித்துக்கொண்டிருந்த ஸமாதாநத்தால் த்ருப்தி அடையாதவராய், அவர் மறுபடியும் ஒரு ஸ்ரீமுகத்தை நியமித்திருக்கிறார். அதை இந்த ஸஞ்சிகையில் மற்றொரு பக்கத்தில் ப்ரகாசிப்பித்திருக்கிறோம். அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைத் தீபிகாபியாகிகள் ஸாக்ஷாத்தாக அறிந்துகொள்ளலாமாகையால் நாம் அவைகளைப்பற்றி விஸ்தாரமாக விசாரிக்க ப்ரவ்ருத்திக்கவில்லை. அவரால் கேட்கப்பட்டிருக்கும் ப்ரச்நங்களுக்கு மாத்ரம் ஸமாதாநத்தைச் சொல்லிவிட்டு அதனுடன் விரதராகிறோம்.

**ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை.**

இக்காலத்தில் நமக்குள் காணப்படும் பரஸ்பர ஸௌஹார்த்தக் குறைவையும் த்வேஷத்தையும் பார்த்து, ஸ்ரீமாந் ஐயங்கார், மிக்க மனவருத்த மடைந்தவராய், 'என்ன உபாயத்தைக் கைப்பற்றினால் இந்தக் கெட்ட மனோ பாவம் மாறும்?' என்று தீர்க்கமாக ஆலோசித்துத் தம்முடைய புத்திக்கு ஸமீசீநமாகத் தோன்றின உபாயத்தை வெளியிட்டிருக்கிறார் என்பதை நாம் நன்றாக அறிவோம். அவருடைய மனோபாவம் அவ்விதம் சுத்தமாக இருக்கையிலும், சில அஜ்ஞாதங்களான காரணங்களால் அவர், உபாயாந்வேஷ

ணத்தில் தவறி விட்டார் என்று மாத்ரம் நமக்குத் தோன்றுகிறது. அவருடைய ஸ்ரீமுகத்தில், நாம் அவரைப்பற்றி அந்யதா க்ரஹணம் செய்து விட்டதாகச் சங்கித்து அவர் எழுதியிருக்கிறார். அப்படி எவ்வித அந்யதா க்ரஹணமும் நாம் செய்யவில்லை; சென்ற ஸஞ்சிகையில் நாம் எழுதியிருந்த குறிப்பில் அம்மாதிரியான விபரீத க்ரஹணத்தை ஸூசிப்பிக்கும் சப்த மொன்றையும் நாம் ப்ரயோகிக்கவுமில்லை. அப்படி ஏதாவது வசந விரோதங்கள் இருக்கும் பக்ஷத்தில் நாம் அதைப்பற்றி அநுசயிக்க ஸந்நத்தராக இருக்கிறோம்.

முதலில், பூர்வகாலத்தில் பாஞ்சராத்ர க்ரந்தங்கள் இருந்திருக்கலாமென்றும், ஆனால் அவை அநுஷ்டாநத்தில் இல்லாமல் இருந்திருக்க வேண்டுமெனறும், அப்படி அவை அநுஷ்டாநத்தில் இருந்திருக்கவில்லை என்பதற்கு ஆளவந்தார் ஆகம ப்ராமாண்யம் செய்ததும் தேசிகன் பாஞ்சராத்ர ரக்ஷை செய்ததுமே போதுமான நிரூபணமென்றும் அவர் சொல்லுகிறார். இது வஸ்து ஸ்திதிக்கும் யுக்திக்கும் விருத்தம். ஆதி காலங்களில் பல யோகிகள் பாஞ்சராத்ர க்ரமத்தை அநுஸரித்து பகவானைப் பஜித்து வந்திருப்பதாக ஸ்ரீபாரதத்திலிருந்து வ்யக்தமாக ஏற்படுகின்றது. ஆகையால் அது ஆதிகாலம் முதல் அநுஷ்டாநத்தில் இருந்திருக்கவேண்டும். விஷயங்களின் ப்ராமாண்ய ஸ்தாபநமும் அவைகளுக்கு ரக்ஷையைச் செய்வதும் அந்த விஷயங்கள் அநுஷ்டாநத்தில் இருந்திருக்கவில்லை யென்பதை ஸூசிப்பிக்க மாட்டா. அவைகளின் உண்மையை உள்ளபடி அறியாதவர்கள், அஜ்ஞாநத்தாலாவது அபிநிவேசத்தாலாவது அவைகளின்மீது அபூதங்களான தோஷங்களை ஆரோபிக்கும் பக்ஷத்தில், அவைகளின் ப்ராமாண்ய ஸ்தாபநத்திற்கும் அவைகளுக்கு ரக்ஷை செய்வதற்கும் ஆவச்யகதை உடனே ஏற்படுமன்றோ? ஸர்வோத்க்ருஷ்டங்களான பதார்த்தங்கள் மீதும் அவைகளின் தத்வத்தை அறியாதவர்கள் தோஷம் ஆரோபிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். தத்வ ஸ்திதியை ஸம்யக்காக அறியாதவர்களும் இந்த ஜகத்தில் பலருண்டு.

இரண்டாவது, 'தமிழ் பாஷையை நாம் கொண்டாடித் திருவாய்மொழி முதலிய க்ரந்தங்களை நாம் வேதம் போல அத்யயநம் செய்வது வேத விரோதத்தைக் காண்பிக்கவில்லையா? ப்ராஹ்மணர்கள் வைதிக கர்மாநுஷ்டாநங்களில் ஸம்ஸ்க்ருத பாஷையை உபயோகப்படுத்தி வருவது வழக்கமாக இருக்க, ப்ரபந்தங்களைச் சில விடங்களில் ப்ரவேசிப்பிப்பது உசிதமாகுமோ? அப்படி எல்லாப்பாஷைகளையும் ஸ்வீகரிக்கலாமானால் இதற்கு முடிவு எங்கே?' என்று அவர் கேட்கிறார். இதற்கு ஸமாதாநம்:—நாம் வைதிக கர்மாநுஷ்டாநங்களில் வேத வாக்யத்திற்கு பதிலாக ப்ரபந்தங்களை ப்ரவேசிப்பிக்க



வில்லை. பகவத்குணாநுபவத்திற்கு மாத்ரம் அவைகளை உபயோகிக்கிறோம். அதில் எவ்வித பாதகமுமில்லை.

“ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நரோத்தம ।
பாஷாகாநம் நகாதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம் ॥”

என்னும் யம வசநத்தின்படியே பாஷா நிஷேதம் பகவத் வ்யதிரிக்த விஷயங்களிலே மாத்ரம் ப்ரவ்ருத்திக்கும். தவிரவும், ஆழ்வார், தம்முடைய க்ருபாதிசயத்தால் வேதத்தில் அநதிகாரிகளான ஸ்த்ரீ சூத்ராதிகளும் இழவாதபடி வேதார்த்தத்தை த்ராவிட பாஷையில் அருளிச் செய்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது. இந்தத் தமிழ் ப்ரபந்தங்கள், அநேக ஜந்மங்களில் எம்பெருமான் தானே தொடர்ந்து விஷயீகரிக்கைக்கடியான பாக்யத்தையுடையராய், நிரந்தர பகவத் கடாக்ஷ பாத்ர பூதராய், தத்வ ஹிதங்களில் நிபுணராய், அவற்றினுடைய உபதேசத்திலும் ப்ரவ்ருத்தராய், விதுர சபர்யாதிகளைக் காட்டிலும் அதிமாத்ரம் விலக்ஷணராய் இருந்த ஆழ்வார் பக்கலிலே பிறந்தவைகள். பாஷாந்தரங்கள் நடையாடும் தேசத்தில் பிறந்து விலக்ஷணராயுள்ளாரும் இவற்றின் வைலக்ஷண்யத்தைக் கேட்டு “இவற்றை யப்யஸிக்கைக் கீடான இப்பாஷை நடையாடும் தேசத்தில் நாம் பிறக்கப் பெற்றிலோமே!” என்று கதறி யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெருமை யெல்லாம் எந்தப் பாஷையில் இருக்கின்றதோ அது நமக்குப் பரிக்ராஹ்யம் என்பதில் எவ்வித ஆக்ஷேபமும் இல்லை.

மூன்றாவது, “சைவாகமங்கள் வேத விருத்தங்களென்று வைஷ்ணவர்கள் சொல்லுகிறார்களன்றோ? ஒரு ஆகமம் அவைதிகமானால், மற்றொன்றும் அது போலவாகாதோ?” என்றும் அவர் கேட்கிறார்.

“வாதூலேவ ப்ரஸஜதி ததா ஸோமபேஷ்வபி ஸுராபேஷு”

[ஸோம பாநம் செய்பவர்களும் பாநம் செய்கிறபடியால் அவர்கள் கள் குடிப்பவர்களுக்குத் துல்யமாகி விடுவார்களோ?] சைவாகமங்கள் வேத விருத்தங்களென்று வைஷ்ணவர்கள் சொல்வதற்குக் காரணம், அவை ஆகமங்கள் என்பதன்று; அவைகளில் வேத விரோதங்கள் காணப்படுகின்றன வென்பதே. அப்படிப் பாஞ்சராத்ரத்திலும் வேத விரோதங்கள் காணப்படும் பக்ஷத்தில் பாஞ்சராத்ரமும் அவைதிகமாகும். பாஞ்சராத்ரத்தில் வேதவிரோதமில்லை என்பதே நம்முடைய கக்ஷி,

அஹங்காரம் கூடாது என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். 'நான் ஸ்ரீ வைஷ்ணவன், ஆகையால் மற்றவர்களைக் காட்டிலும் நான் உத்க்ருஷ்டன்' என்னும் அஹங்காரம் எப்படி ஹேயமோ, அப்படியே 'நான் ப்ராஹ்மணன், ஆகையால் இதர ஜாதியர்களைக் காட்டிலும் நான் உயர்ந்தவன்' என்னும் அபிமானமும் ஹேயமே. ஸ்ரீ பகவத் கீதையில் ஸாக்ஷாத் ஸ்ரீ சரண்யனாலேயே நியமிக்கப்பட்டுள்ள அமாநித்வம் முதலிய குணங்கள்தாம் ஆத்ம ஜ்ஞாந ஸாதநங்கள். கலியுக மாஹாத்ம்யத்தால் அவை ஸர்வத்ர லோபத்தை அடைந்து வருகின்றன; வைஷ்ணவர்களிடத்தில் மாத்ரம் ஆப்தங்களாகி வருகின்றன வென்பது இல்லை. அவைகளை அபிவ்ருத்தங்களாகச் செய்வது ஒற்றுமையின் ஸம்பாதநத்திற்கு உசிதமான உபாயமே தவிர, பாஞ்சராத்ரத்தையும் ஸம்ப்ரதாய விச்வாஸத்தையும் த்யஜிப்பது உசிதங்களான உபாயங்களாகமாட்டா.

இந்த விஷயத்தில் நாம் இவ்வளவு எழுதினதை ஸ்ரீமாந் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். நிரபராதமான பாஞ்சராத்ரத்தின்மீது அவர் தோஷத்தை ஆரோபித்ததே நம்மை இவ்வளவு எழுதும்படித் தூண்டிற்று.

*** *** ***

ஹிந்து முஸல்மன் விவாஹம்.

சென்ற ஆடி மாஸம் 28-ஆ ஞாயிற்றுக்கிழமை நம் மதிராஸைச் சேர்ந்த அடையார் என்னும் ஸ்தலத்தில் ஒரு ப்ராஹ்மண ஸ்த்ரீக்கும் ஒரு முஸல்மான் புமானுக்கும் விவாஹம் நடந்ததாக நாம் பத்ரிகைகளிலிருந்து அறிகிறோம். மதிராஸ் வைத்ய பாடசாலையில் வைத்யப் பரீக்ஷைக்குப் படித்துவரும் ஸ்ரீமதி ஜாநகி என்னும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸ்த்ரீ, குண்டூரில் ஜில்லா பாரெஸ்ட் உத்யோகஸ்தராக (Forest Cfficer) இருக்கும் அப்துல் கரீம் ஸாஹிப் என்னும் ஒரு முஸல்மானை விவாஹம் செய்து கொண்டாளாம். பெஜ்வாடாவில் பெரியதொரு ஸர்க்கார் உத்யோகத்தை வஹித்து வரும் ஸ்ரீமாந் எ. எஸ். ராஜகோபால ஐயங்கார் என்பவர் இந்தப் பெண்ணின் பிதா. அவர் பூர்ண அநுமதியுடன் இந்த விவாஹத்தை நடத்தி வைத்ததாகவும், அந்தக் கல்யாண காலத்தில் அநேக பெரிய மனிதர்கள் ஸந்நிஹிதர்களாக இருந்து கல்யாணத்தை ஆமோதித்ததாகவும் நாம் கேள்விப்படுகிறோம்.

வர்ண தர்மம் ஜாதிதர்மம் முதலிய தர்மங்களை அநாதரித்து, தம்முடைய மனஸ்ஸுக்கு த்ருப்திகரங்களாகத் தோன்றும் கார்யங்களைத் தம்முடைய



இஷ்டப்ரகாரம் அநுஷ்டிப்பதற்கு, இக்காலத்திய சட்டம் பூர்ண அநுமதியை ஜநங்களெல்லாருக்கும் நிராபாதமாகக் கொடுக்கின்றது. சாஸ்த்ரத்திற் சொல்லப்பட்டுள்ள விதி நிஷேதங்களுக்கு விருத்தமாக ஒருவன் ஒரு வ்யாபாரத்தைச் செய்தால், அவனை 'ஏன் அவ்விதம் செய்தாய்?' என்று கேட்பதற்கு ஒருவருக்கும் அதிகாரமில்லை. ப்ரதிதிநமும் அசாஸ்த்ரீயங்களான நடவடிக்கைகள் ஆயிரக்கணக்காக நடைபெறி வருவதை நாம் பார்த்து வருகிறோம். அவை போல இந்த விவாஹமும் ஒரு பெரிய அசாஸ்த்ரீயமான கார்யமே. அவைகளில் நாம் உதாஸீநராக இருப்பது போல, இந்த விஷயத்திலும் நாம் ஔதாஸீந்யத்தை வஹிக்கவேண்டும் என்பதே நமது அபிப்ராயம். ஆனாலும், இம்மாதிரியான உத்கட ப்ரவ்ருத்திகள் இதுவரையில் அதிகமாக ஏற்படவில்லை யாதலாலும், இவைகள் இன்னும் அபிவ்ருத்தமாகிப் பல விடங்களில் பரவினால் தேசத்திற்கே பெருந்த தீங்கு விளையுமென்று நமக்குத் தோன்றுகிறபடியாலும் இப்பொழுது இதைப்பற்றிக் கொஞ்சம் விசாரிக்க ப்ரவ்ருத்திக்கிறோம்.

இம்மாதிரியான ப்ரவ்ருத்திகள் ஐஹிக ஆமுஷ்மிகங்களான இரண்டு வித ச்ரேயஸ்ஸுக்களுக்கும் அதிமாத்ரம் பாதகங்கள். லோகத்தில் மநுஷ்ய ஜாதி ஒன்றாக இருந்தாலும், அந்தந்த மநுஷ்யர்கள் வஸிக்கும் ஸ்தலங்களுக்கும் அவரவர்களின் பூர்வ ஸம்ஸ்காரத்திற்கும் அவரவர்கள் பிறந்திருக்கும் ஜாதிக்கும் அநுகுணமாக வெவ்வேறு சித்த வ்ருத்திகளும் வெவ்வேறு ஆசாரங்களும் அந்தந்த மநுஷ்யர்களுக்கு ஸம்பவிக்கின்றன. அந்தச் சித்த வ்ருத்திகளுக்கும் ஆசாரங்களுக்கும் ஒத்துவரும்படி அவர்களின் ப்ரவ்ருத்தி ஏற்படாவிடாழிய, அவர்களுக்கு ச்ரேயஸ் என்பது ஸம்பவிக்க ஹேதுவில்லை. இதை உத்தேசித்தே, லோக ப்ரவ்ருத்திகளெல்லாவற்றையும் எல்லாரும் தம்தம் தேசாசாரத்திற்கும் பூர்வ ஸம்ஸ்காரத்திற்கும் ஒத்தே அநுஷ்டித்து வருகிறார்கள். இந்த நியமத்தைக் குலைக்க நாம் ப்ரவ்ருத்திப்பது ஹிதமான கார்யமாகுமா? வெவ்வேறு ஸம்ஸ்காரத்தைப் பெற்றிருக்கும் வெவ்வேறு ஜாதியர்கள் பரஸ்பரம் விவாஹம் செய்துகொள்ள ப்ரயத்நப்பட்டால் அப்படிப்பட்ட விவாஹத்தால் அந்தத் தம்பதிகளுக்காவது அவர்களிடமிருந்து ஜநிக்கும் ப்ரஜைகளுக்காவது ச்ரேயஸ் ஏற்படுமா என்பதை அம்மாதிரி வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்திப்பவர்கள் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். இந்த விஷயத்தை அநேக அபிஜ்ஞர்கள் நன்றாக விசாரித்து, பிந்ந ஜாதியர்கள் பரஸ்பரம் விவாஹம் செய்துகொள்ளக் கூடாது என்று நிர்ணயித்திருப்பதை நாம் அறிவோம். ஹிதத்தின் ஸ்திதி இவ்விதம் இருக்க, இந்தப் பெரியோர்கள் இதைச் சற்றேனும் கவனியாமல்

இம்மாதிரி அஹிதங்களான கார்யங்களை நடத்திவருகிறார்களென்றே நாம் சோகிக்கிறோம்.

ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்கும் இவை பாதகங்கள். லோக ப்ரவ்ருத்திகளில் நாம் நமது இந்த்ரியங்களை ஒருவிதமான நிரோதத்திற்குப் பழக்கி, நாம் அவைகளுக்குப் பரவசமாகாமல் அவைகளை நமது ஸ்வாதீநத்தில் வைத்துக்கொண்டு வருவதுதான் ச்ரேயஸ்கரம் என்பதை நிரூபகர்களெல்லாரும் ஒத்துக்கொள்வார்கள். அப்படி அடக்குவது உபாயங்களாலேயே ஸாத்யமாதலால் அதற்கு நமது பெரியோர்கள் அநேக உபாயங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவைகளுள் ஆஹார வ்யவஹார நியமங்கள் ஒன்று. கண்ட விடங்களில் அகப்பட்டவையெல்லாவற்றையும் புஜிப்பதும் ஜாதி முதலிய நியமமின்றிக்கு மநஸ் த்ருப்தியை மாத்ரம் அவலம்பித்து விவாஹங்களைச் செய்து கொள்வதும் அந்த அடக்குதலுக்கு அத்யந்தம் பாதகங்கள் என்று அந்தப் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பாதக ஸாமக்ரிகள் ஜநங்களுக்குள் ஸாமாந்ய அநுஷ்டாநமாக ஸம்பவித்து விட்டால், நமக்கு அபிவ்ருத்தி என்பது எப்படி ஏற்படும்? திர்யக்குக்கள் போல எவ்வித நியமுமில்லாமல் மநஸ்ஸில் தோன்றும் விஷய ஸுகங்களை அநுபவித்துக் கொண்டு கேவலம் ஐஹிக போகபரர்களாய் நாம் வர்த்தித்து வருவதற்காகவா நமக்கு இந்தக் கரணகளேபரங்களும் விவேகமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன? இதைச் சற்று ஆலோசிக்க வேண்டாமோ?

ஆனால், 'இப்படிப்பட்ட பாதகங்களான கார்யங்களில் ஜநங்கள் ஏன் ஸாமாந்யமாக ப்ரவ்ருத்திக்கிறார்கள்?' என்று கேட்கலாம். நிர்பந்தங்கள் என்பவை ஜநங்களுக்கு அநபிமதமானவை. சாஸ்த்ரங்களோ நிர்பந்தங்களை விதிக்கின்றன. அப்படி நிர்பந்தங்களை விதிக்கும் சாஸ்த்ரங்களின்மீது இருக்கும் த்வேஷமும் அவைகளின் விதி நிஷேதங்களுக்கு உட்பட்டு நடப்பதில் இருக்கும் அநபிமதமுமே இம்மாதிரியான விபரீத ப்ரவ்ருத்திக்குக் காரணங்களென்று நாம் நினைக்கிறோம். தவிரவும், பெரியோர்கள் எந்தக் கார்யத்தைச் செய்யக்கூடாது என்று சொல்லுகிறார்களோ அதைச் செய்வதில் ஒரு உத்ஸாஹத்தை நாம் பாலர்களிடத்தில் பார்த்திருக்



கிறோமல்லவா? பாலர்களைப் போல விவேக சூந்யர்களாக இருக்கும் பெரியோர்களிடமும் இந்த உத்ஸாஹம் ஜநிக்கக்கூடும். மேலும், பால்யம் முதல் இக்காலத்திய ஸம்ஸ்காரத்திலேயே பயிற்சி அடைந்து, தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்மா ஒன்று உண்டென்றும் அதன் ச்ரேயஸ்ஸைத் தேடுவதே நமது முக்ய தர்மமென்றும் இத்யாதியான விசேஷ விஷயங்களுக்கு அத்யந்தம் அபரிசிதர்களாய், அம்மாதிரியான விஷயங்களை உபதேசிக்கும் ஸத்துக்களுடைய ஸங்கத்தைப் பெறாமலும் ஸதாசாரங்களை அநுஷ்டித்து வரும் ஸாதுக்களைப் பாராமலும் நமது பாலர்கள் வளர்ந்து வந்தால், இம்மாதிரியான ப்ரவ்ருத்தியில் தோஷத்தை அவர்களால் எவ்விதத்தில் பார்க்கமுடியும்? இவைபோன்ற காரணங்களே ப்ராக்ருத வ்யாபாரத்திலும் ப்ரேரகங்களாக இருக்கவேண்டும். எது காரணமாக இருந்தபோதிலும், இந்த ப்ரவ்ருத்தி மஹத்தான தீமைக்கு உத்பத்தி ஸ்தாநமாகும் என்பது நிச்சயம்.

தாஷ்ஷிதனார்—சாஸ்த்ரங்களின்மீது இவர்கள் த்வேஷம் கொள்வதாலும் அவைகளின் விதி நிஷேதங்களை அநாதரிப்பதாலும் சாஸ்த்ரங்களுக்கு எவ்வித ஹாநியும் ஒரு பொழுதும் ஸம்பவிக்கமாட்டாது. ஆனால், அப்படி அவைகளை த்வேஷிக்கும் பொழுது அவைகளுக்கு ஒத்து நடப்பது போல ஒரு விடம்பநம் ஏன் செய்யவேண்டும் என்பது நமக்கு விளங்கவில்லை. இந்த விவாஹம் நடந்தபொழுது ஹிந்துமத ப்ரகாரம் ஸகல அநுஷ்டாநங்களும் நடைபெற்றன வென்று அவர்கள் சொல்லுகிறார்களே! அக்நி ஹோமமும் மந்த்ரோச்சாரணங்களும் செய்யப்பட்டனவா? முஸல்மானாய்ப் பிறந்தவனுக்கு அக்நிஹோமமும் மந்த்ரோச்சாரணங்களும் எந்தச் சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன? ஆச்சர்யம். இந்தக் கலிகாலத்தில் என்னவென்ன கேளிகள்தாம் நடைபெறமாட்டா?

அஜ்ஞாநத்தாலும் ஜந்மாந்தர கர்ம வாஸநையாலும் இவர்கள் இந்த அக்ரமத்தைச் செய்திருக்கிறார்களாகையால், அவர்கள் மீது நாம் கோபம் கொள்கிறோமில்லை. விவாஹம் என்பது சுபமான கார்யம். அது ஸம்பத்தமாக நம் சொல்லும் வார்த்தையும் சுபமாக இருத்தல் வேண்டும். இந்தத்

தம்பதிகள், தம்மால் அபிலஷிதமான போகத்தை ஆத்ருப்தி அநுபவித்து, பிறகாவது பகவத் க்ருபையால் நல்ல ஜ்ஞாநத்தைப் பெற்று ஆத்ம ச்ரேயஸ்ஸுக்கு உசிதமான மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கும்படி கருணாநிதியாயுள்ள சரண்யன் அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் ஸஹ்ருதயம் ப்ரார்த்திக்கிறோம்.

* * *

**காஞ்சீபுரம் ஸ்ரீ வைஷ்ணவ வித்வத்ஸதஸ்.**

ஏற்கெனவே தீபிகையில் ப்ரசுரம் செய்திருந்த ப்ரகாரம், சென்ற ஆடி மாஸம் 26௳ முதல் ஆறு தினங்களுக்கு, ஸ்ரீ காஞ்சீநகரத்தில் ப்ரதிவாதி பயங்கர மடத்தில் பெரியதொரு வித்வத்ஸதஸ் நடைபெற்றது. மைஸூர் மஹா மஹோபாத்யாய ஸ்ரீ லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர், மஹாவித்வான் நக்கிஹல்லி ஸ்ரீ திருமலாசார்யர், வித்வான் ஸ்ரீ தேவசிகாமணி ராமாநுஜாசார்யர், வித்வான் இஞ்ஜிமேடு ஸ்ரீ. ரங்கநாதாசார்யர் முதலிய அநேகபண்டித ச்ரேஷ்டர்கள் அந்த ஸதஸ்ஸை அலங்கரித்ததாகவும், அத்யுத்க்ருஷ்டங்களான உபந்யாஸங்கள் நடந்ததாகவும் நாம் அறிகிறோம். அநேக அருமையான விஷயங்களைப் பற்றி பூர்வபக்ஷ ஸித்தாந்த ரூபமான வாக்யார்த்த விசாரங்களும் ஸம்ஸ்க்ருத பாஷையிலேயே நடந்தனவாம். ஸ்ரீமான் திவான் பகதூர் டி. ரங்காசார்யர் ஸ்ரீமான். வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலிய பல ஆஸ்திக ப்ரபுக்களும் அக்காலத்தில் அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்து, ஸம்ஸ்க்ருத பாஷா ப்ரசாரத்தின் ஆவச்யகதையைப் பற்றியும் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தின் அபிவ்ருத்தியைப் பற்றியும் பஹூவாகப் பேசினார்களாம்.

இதைக்கேட்க நாம் மிக்க ஆநந்தத்தை அடைகிறோம். பாஷாந்தர ப்ரசாரமும் அர்த்தகாம பரதையும் நிறைந்துள்ள இக்காலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையையும் வேதாந்த சாஸ்த்ரங்களையும் அபேக்ஷிக்கும் ஜநங்களும் இருக்கிறார்கள் என்று அறிவது ஆநந்தகரமன்றோ? இம்மாதிரி இன்னும் பலவிடங்களில் பலவித்வத் ஸதஸ்ஸுகள் நடைபெற்று, இப்பொழுது மலினம் போலவிருக்கும் நமது கீர்வாண பாஷைக்கும் நமது சாஸ்த்ரங்களுக்கும் யதாபூர்வம் பூர்ண ப்ரகாசம் மறுபடியும் ஆவிர்பவிக்கும்படி ஸ்ரீசரண்யன் அநுக்ரஹிக்க வேணுமென்பதுதான் நமது ஹார்த்தமான ப்ரார்த்தனை.



* * *

**பாச்சாத்யர்களின் நாகரிகம்**

“பாச்சாத்யர்களுடைய நாகரிகம்” என்னும் விஷயத்தைப்பற்றி “தேசாபிமாநி” என்னும் ஒருவர் ஒரு கடிதம் நமக்கு எழுதி அனுப்பியிருப்பதை நாம் இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். அவர் எழுதியிருப்பது முழுவதும் உண்மையென்பது ப்ராமாணிகர்களுடைய வாக்யத்திலிருந்து ஏற்படுகின்றது. அமெரிகா தேசத்தில் போல இங்கிலாந்து முதலிய மற்றை தேசங்களிலும் இந்த வைபரீத்யம் ஸம்பவித்திருக்கின்றதாம். ஸ்த்ரீ தர்மங்கள் எவ்விதம் இருக்க வேண்டும் என்பதை அறியாமல் புமான்களுடைய ஸ்வாதந்த்ர்யத்துக்குத் துல்யமான ஸ்வாதந்த்ர்யத்தை ஸ்த்ரீகளும் அநுபவிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு ஸகல வ்யாபாரங்களிலும் ஸர்வ ஸ்வாதந்த்ர்யத்தைக் கொடுத்ததன் பலமன்றோ இந்தப் பரிபாகம்? இந்தத் துர்த்தசை சற்றேறக்குறைய இருபது வர்ஷகாலமாகவே மஹத்தான உந்மேஷத்தை அடைந்துவருகின்றது. நாம் இப்பொழுது இவ்விடத்தில் நமது பாலர்களை வித்யாப்யாஸத்தை உத்தேசித்து நாம் இருக்குமிடத்திலிருந்து பெரிய பத்தநாதிகளுக்கு அனுப்புவதுபோல, அமெரிகா தேசத்தில் பாலைகளையும் அம்மாதிரி அனுப்புகிறார்களாம். பாடசாலைகளைச் சேர்ந்த போஜநசாலைகளில் போஜநாதிகளைச் செய்துகொண்டும், அவர்களுக்கு இஷ்டமான ஸ்தலத்தில் ச்ரத்தையுள்ள பெரியோர்களுடைய பராமர்சமின்றிக்கே வஸித்துக் கொண்டும், செலவுக்கு அபேக்ஷிதமான த்ரவ்யத்தை மாதா பிதாக்களிடமிருந்து அடிக்கடி பெற்றுக் கொண்டும், விவேகப் பயிற்சி பெறாமல் இருக்கும் பாலர்களும் பாலைகளும் பரஸ்பர ஸாந்நித்யத்தில் வர்த்தித்து வந்தால், அவர்கள் இந்த்ரிய த்ருப்தியைத் தேடிக்கொள்ளாமல் இருப்பதும் ஸாத்யமோ? பண்டைய காலத்திய க்ரமங்களெல்லாம் போய் விட்டன; தைவத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்த்ரீ புமான்களுக்குள்ள விசேஷங்களை நிர்லஜ்ஜமாகவும் நிஸ்ஸங்கோசமாகவும் எல்லாரும் எவ்வித வ்யவஸ்தையுமின்றிக்கே ஆதரித்துக் கொண்டாடும் காலம் வந்துவிட்டது; ஸ்வச்சந்த விஹாரத்தில் எவ்வித தோஷமுமில்லையென்னும் ஜ்ஞாநமே ஸார்வத்ரிகமாகப் பரவி வருகின்றது.

கலியின் கொடுமை இதைக்காட்டிலும் தீவ்ரமாகவும் இருக்கக் கூடுமோ? இது தான் இக்காலத்திய பாச்சாத்ய நாகரிகம். இந்த நாகரிகத்தைப் பெரிதாகக் கொண்டாடும் நமது தேசோத்தாரக ஸுஹ்ருத்துக்கள், அமெரிகா முதலிய தேசங்களுக்கு இப்பொழுது ஸம்பவித்திருக்கும் இந்தத் துர்த்தசையைப் பார்த்தாவது கொஞ்சம் புத்தியை அடையமாட்டார்களா? "முன் செல்லுமவர்கள் கிணற்றில் விழுந்தால், அது பின் வருபவர்களுக்கு தீவட்டி பிடித்தது போலவாகும்" என்னும் பழமொழி இவர்கள் விஷயத்தில் ஸார்த்தகமாக வேண்டாவோ?

* * *

இவ்வர்ஷத்திலும் உபாகர்மாநுஷ்டாநத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் பேதம் ஏற்பட்டுவிட்டது. சிலர் ஆடி மாஸத்திய பூர்ணிமையிலும் சிலர் ஆவணி மாஸத்திய பூர்ணிமையிலும் அதை அநுஷ்டித்தார்கள். ஸ்மார்த்தர்களுக்குள் எவ்வித பேதமுமில்லை. இவ்விதம் ஸகல வ்ரதங்களையும் ஸகல உத்ஸவங்களையும் நாம் பேதித்து அநுஷ்டித்து வந்தால், நமது அநுஷ்டாநத்தின் ஸாதுத்வத்தில் ஸாமாந்ய ஜநங்களுக்கு எப்படி கௌரவ புத்தி ஜநிக்கும்? இப்படி எல்லாருக்கும் பரிஹாஸாஸ்பதமாகாமல் நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ள நமது பண்டிதர்கள் முன்வர மாட்டார்களா? ஜ்ஞாநத்திலும் அநுஷ்டாநத்திலும் வயஸ்ஸிலும் சிறந்தவர்களாயிருக்கும் வித்வாங்கள் ஒன்று சேர்ந்து நாம் அநுஷ்டிக்க வேண்டிய வ்ரதாதிகள் விஷயமாகப் பூர்வமாகவே ஒரு வித நிர்ணயத்தைச் செய்தால், அது எல்லாருக்கும் பரமோபகாரகமாக இருக்கும். ஸ்ரீ சரண்யன் அவர்களை அம்மாதிரிச் செய்விக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இவ்வர்ஷத்திய உபாகர்மம்



யதேதிந்த்ரியத்வேநாபிமதம்; ஆகாஶஸ்ய து ஸர்வேஷாம் ஶரீரேஷு ஸந்நிஹிதஸ்ய கர்ணப்ரதேஶ ஸம்ஸ்காரஸம்யோக இதி ப்ராஹு ண்யதி உபாதிஸம்யோக ஸம்ப்ரதேஶாதியச்ச ஸவ। ஆகாஶஸ்ய ஸாக்ஷாதேவைநைவ ஶ்ரோத்ரேந்த்ரியத்வ ஸம்பவமதோ வீந்த்ரியத்வாபாவோக்தா; ஸாத்த்விகாஹங்காரோ ந ஶ்ரோத்ரேந்த்ரியம், வைகாரிகாஹம்

---

மான காற்றினால் ஸம்ஸ்காரத்தை அடையும் காது ப்ரதேசத்துடன் கூடிக்கொண்டிருக்கும் ஆகாசமே அந்த இந்த்ரியம். அந்த ப்ரதேசத்திற்கும் மற்றை ப்ரதேசங்களுக்கும் எவ்வித பேத வ்யவஸ்தை இல்லாமலிருந்தபோதிலும் இந்த்ரிய வ்யவஸ்தை உபபந்நமாகும். கேவல ஆகாசத்திற்கோவென்றால், அது, எல்லாருடைய சரீரங்களும் ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்குப் போகும்பொழுது, எவ்வித நியமுமின்றிக்கே ஸகலமான ப்ரதேசத்துடன் ஸம்பந்தத்தைப் பெறுகின்றது. அம்மாதிரியே, ப்ரஹ்மத்தின் விஷயத்தில் ப்ரதேசபேதத்தின் நியமம் இருக்கிறபடியால், உபாதியின் ஸம்யோகம் அந்த ப்ரஹ்மத்திற்கு நிச்சயம் ஸம்பவிக்க வேண்டும். தவிரவும், ஐந்து வித பூதங்களுள் ஒன்றாகிய ஆகாசத்தையே காது என்னும் இந்த்ரியமாக நீங்கள் சொல்லுகிறீர்கள். அது சாஸ்த்ர விருத்தம். நீங்கள் சொல்வதை ஒத்துக்கொண்டே நாமும் இதுவரையில் ஸமாதாநம் சொன்னோம். இப்பொழுது அதன் உண்மையைச் சொல்லுகிறோம். ஆகாசம் ச்ரோத்ரேந்த்ரியமாக

---

ஆகாஶஸ்ய ஸாக்ஷாதேவைநைவ ஶ்ரோத்ரேந்த்ரிய ஸம்பவமதோ வீந்த்ரியத்வநோக்தா — இந்த்ரியம் என்பது கேவல ஆகாசம் அன்று. அப்படி அதை ஆகாசமென்று ஒத்துக்கொண்டே இப்பொழுது நாம் ஸமாதாநம் சொன்னோம். உண்மையை விசாரித்தால் இந்த்ரியம் ஆகாசமன்று என்பது விளங்கும். அப்பொழுது பாஸ்கரர்களால் சொல்லப்படும் த்ருஷ்டாந்தம் ஸர்வதா அநுபபந்நமாகி விடும்.

வைகாரிகாஹங்காராதேகாதஶேந்த்ரியாணி — வைதிக ப்ரக்ரியை பின்வருமாறு நிற்கும். ப்ரக்ருதி மஹத் முதலான தத்வங்களுள் அஹங்காரம் என்னும் பெயருடைய தத்வம் ஒன்று. அது, ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்று வகைப்படும். ஸாத்விகாஹங்காரத்தை வைகாரிகமென்றும், ராஜஸத்தைத் தைஜஸமென்றும், தாமஸத்தைப் பூதாதியென்றும் சொல்வார்கள். ப்ருதிவீ அப்பு தேஜஸ் வாயு ஆகாசம் என்னும் ஐந்து வகைப்பட்ட பூதங்களும் தாமஸாஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன; ஜ்ஞாநேந்த்ரியங்கள் ஐந்து, கர்மேந்த்ரியங்கள் ஐந்து, மநஸ் ஒன்று, ஆகப் பதினொரு இந்த்ரியங்களும் ஸாத்விகாஹங்காரத்திலிருந்து உண்டாகின்றன. இது வைதிகர்களுடைய மதம். இது இப்படி இருந்தால், ச்ரோத்ரேந்த்ரியத்தை ஆகாசமென்று எவ்விதம் சொல்லக் கூடும்?

காராஷெகாடிஸெஂ௫்ரியாணி ஜாயந்த உதி வி வெதிகாஃ। யஸொக்தஂ ஹமவதா வராஸரெண,

"தைஜஸாநீஂ௫்ரியாண்யாஹு- ஷெ-உவா ரெவகாரிகா டிஶ।
வெகாடிஶஂ உநஸ்யாஆ ஷெவா ெவெகாரிகாஃ ஸ்மருதாஃ॥"

உதி। அயமஃ—"வெகாரிகவெஜஸொ ஹூதாதிரிதி த்ரிவிதொஉஹஂகாரஃ। ஸ அ க்ருதாத்ஸ்விகொ ராஜஸஸ்தாஸஸஸ்வு। தக்ர தாமஸாஹூதாதெராகாஶாதீநி ஹூதாநி ஜாயந்த உதி ஸ்ருஷ்டி க்ரமஂ டூஉக்த்வா, தைஜஸாத்ராஜஸாதஹஂகாரா ஷெகாடிஶெஂ௫்ரியாணி ஜாயந்த உதி வாடிநாமவநூஷ்ய, ஸாத்விகாதஹஂகாராத்வெகாரிகா ணீ௫்ரியாணி ஜாயந்த உதி ஸ்வமதஂ ஸூசயதெ "ஷெவா வெகாரிகாஃ ஸ்மருதாஃ" உதி।

---

மாட்டாது. வேதம் அறிந்தவர்கள், பதினொரு இந்த்ரியங்களும் வைகாரிகமாகிற அஹங்காரத்திலிருந்து உண்டாகின்றனவென்று சொல்லுகிறார்கள். பகவாந் பராசரர் பின் வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"இந்த்ரியங்களைத் தைஜஸங்களென்று சிலர் சொல்வார்கள். ஆனால் நாம், அவைகளை வைகாரிகங்களென்றே சொல்வோம்".

இதன் அர்த்தம் என்னவென்றால்—'வைகாரிகமென்றும் தைஜஸமென்றும் பூதாதி என்றும் அஹங்கார தத்வம் மூன்று வகைப்படும். அவைகளுள் வைகாரிகமென்பது ஸாத்விக அஹங்காரம், தைஜஸமென்பது ராஜஸம், பூதாதி என்பது தாமஸம். இவைகளுள் மூன்றாவதாகிற தாமஸ பூதாதியிலிருந்து ஆகாசம் முதலிய ஐந்து பூதங்கள் உண்டாகின்றனவென்று முதலில் ஸ்ருஷ்டி க்ரமத்தைச் சொல்லிவிட்டு, பிறகு, ராஜஸ தைஜஸத்திலிருந்து பதினொரு இந்த்ரியங்கள் உண்டாகின்றனவென்று சிலர் சொல்வதாகச் சிலருடைய மதத்தைச் சொல்லி, அதற்குப் பிறகு "ஷெவா வெகாரிகாஃ

---

தைஜஸாநீஂ௫்ரியாண்யாஹுஃ—இந்த்ரியங்களைத் தைஜஸங்களென்று சொல்லுகிறார்கள். இது பராசர மஹர்ஷியின் வாக்யம். இந்த்ரியங்கள் தைஜஸங்களானால், அவை ராஜஸாஹங்காரத்திலிருந்து உண்டாகிறவையாக இருக்க வேண்டும். அது தமது மதம் அன்று என்பதை "ஆஹுஃ" (சொல்லுகிறார்கள்) என்பதால் ஸூசிப்பித்தார்.

"ஷெவா வெகாரிகாஃ ஸ்மருதாஃ—இந்த்ரியங்களெல்லாம் வைகாரிகங்களென்று ஸ்மரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால், இப்படிச் சொல்வதுதான் தமது மதம் என்பது ஸூசிதமாகின்றது.



ஷெவாஃ—உஂ௫்ரியாணி। ஸவமிஂ௫்ரியாணாஂஸஹஂகாரி காரணஂ ஹூதெஸ்யாவநாயநஂ ஊஹாஹாரத உக்தெ। ஸாதிகெவெஉமிஂ௫்ரியாணாஂ காஸாதி ஹூத விகாரஸ்வாஷெவாகாஶாதி ஹூதவரிணாஂ விஶெஷாஃ

---

ஸ்மருதாஃ' என்பதால் ஸாத்விக வைகாரிகங்களிலிருந்தே இந்த்ரியங்கள் உண்டாகின்றனவென்று தமது மதத்தைப் பராசரர் ஸூசிப்பிக்கிறார். "ஷெவாஃ" என்பதற்கு "இந்த்ரியங்கள்" என்பது பொருள். இப்படி வைகாரிகங்களாயுள்ள இந்த்ரியங்களுக்கு ஆகாசம் முதலிய பூதங்களால் போஷணம் கிடைக்கின்றது என்று மகா பாரதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. 'இந்த்ரியங்கள் பூதங்களுடைய பரிணாமங்கள்' என்று சொல்லும் பக்ஷத்தில், அப்பொழுதும் நாம் சொல்லும் அவ்யவஸ்தை ப்ரஸங்கிக்கின்றது. ஆகாசம் முதலிய பூதங்களின் பரிணாமங்களெல்லாம், ஆகாசம் முதலிய பூதங்களின் விகாரங்கள் என்னும் காரணத்தாலேயே, சரீரம்போல, ஒரு வ்யவஸ்தையுடன் கூடினவைகளாக இருந்து

---

"ஷெவாஃ—உஂ௫்ரியாணி"—"ஷெவாஃ" என்னும் பதத்திற்கு "இந்த்ரியங்கள்" என்பது பொருள். இந்த்ரியங்களை "ஷெவாஃ" என்று சொல்வது வேத ப்ரயோகத்தை ஒத்தது. "ந அக்ஷ-ஷா மநஸாஹுதெ நர்வி வாஅா நாரெதெ ஷெ-உவெஃ" என்பது வேத ப்ரயோகம்.

ஸவமி—முதலில், 'ஐந்து வித பூதங்களே இந்த்ரியங்கள்' என்று பாஸ்கரர்கள் சொல்வதை ஒத்துக்கொண்டு கண்டநம் செய்யப்பட்டது. பிறகு 'பூதங்கள் இந்த்ரியங்கள் அல்ல' என்பது நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது 'பூதங்களின் விகாரங்களே இந்த்ரியங்கள்' என்னும் மதம் கண்டிக்கப்படுகிறது.

ஹூதெஸ்யாவநாயநமி—பூதங்களால் போஷணம். அதாவது, 'இந்த்ரியங்கள் பூதங்கள் அல்ல; ஆனால் இந்த ஐந்து பூதங்களால் அவைகளுக்கு ஒருவித போஷணம் ஏற்படுகின்றது' என்று சொன்னதாயிற்று. இதை இவ்விடத்திற் சொல்வானேன் என்றால், சில க்ரந்தங்களில் இந்த்ரியங்களைப் பௌதிகங்களென்று க்ரந்த கர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள்; அப்படிச் சொல்லியிருக்குமிடங்களெல்லாவற்றிலும் 'இந்த்ரியங்கள் பூதங்களால் போஷணம் செய்யப்படுகின்றன' என்று மாத்ரம் நாம் அர்த்தம் கொள்ள வேண்டுமே தவிர, 'இந்த்ரியங்கள் பூதங்களின் பரிணாமங்கள்' என்று நாம் அர்த்தம் கொள்ளக்கூடாது என்பதை விளக்கும் பொருட்டே.

ஸாதிகெவெஉமிஂ௫்ரியாணாமி—இந்த்ரியங்களைப் பூதங்களின் பரிணாமங்களென்று சொல்வது ஸாத்யமன்று; ஆகையால் கீழ்ச் சொல்லப்பட்ட அநியமம் நிற்கின்

[illegible]

---

கொண்டு, ஜந்துக்களுக்கு இந்த்ரியங்களாக ஆகின்றன. ப்ரஹ்மமோ அவயவமற்றது; விகாரமற்றது; இந்தக் காரணங்களால் சேதிக்கத்தகாதது. ஆகையால் ஜீவனை ப்ரஹ்மத்தின் பரிணாமமென்று சொல்வது ஸாத்யமில்லை. ஆகையால், 'இது உபாதியுடன் ஸம்பந்தம் பெற்ற ப்ரஹ்மம், இது அப்படி ஸம்பந்தப்படாதது' என்று ஒரு வ்யவஸ்தை அநுபபந்நமே. வ்யவஸ்தை அநுபபந்நமாகிறபடியால் உபாதியின் சேர்க்கையால் ஜீவனுக்கு ஸம்பவிக்கும் கணக்கற்ற தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் ப்ரஸங்கிக்கும். அந்த ப்ரஸங்கம் பரிஹரிக்கக்கூடாததே. ஆகையால் இந்தப் பக்ஷத்தை அவலம்பித்திருப்பவர்கள் கேவலம் உபதேசமாத்ரத்தால் த்ருப்தியடைகிறவர்களென்றே சொல்ல வேண்டும். அப்படி த்ருப்தியடைகிறவர்களைச் சாஸ்த்ரம் அறிந்தவர்கள் பஹுமதிக்க மாட்டார்கள்.

---

றதே தவிர விலகவில்லை. உபாதியின் சேர்க்கையால் பரப்ரஹ்மத்திற்கு எவ்வித தோஷமும் ஸம்பவிக்கமாட்டாது என்பது பாஸ்கரர்களின் கக்ஷி; அதற்கு அவர்கள் சொல்லும் ஹேது, 'உபாதியுடன் சேரும் ப்ரஹ்மம் வ்யவஸ்திதமாக இருக்கின்றதாகையால் அதனுடன் சேராமலிருக்கும் சுத்த ப்ரஹ்மம் சுத்தமே' என்பதுதான். 'அப்படி வ்யவஸ்தை இருந்தால் நீங்கள் சொல்வது உபபந்நமாகும்; அப்படிப்பட்ட நியமம் ஒன்றுமில்லையே' என்பதுதான் நம்முடைய ஆக்ஷேபம்.

ஶரீரவத்—'சரீரம் போல'. சரீரமானது பூதங்களின் விகாரம். அந்தக் காரணத்தால் அதற்குச் சரீரத்தன்மை வ்யவஸ்திதம். ஜீவன் ப்ரஹ்மத்தின் விகாரமன்று; ஆகையால் அதற்கு வ்யவஸ்தை இல்லை. ஜீவனை ப்ரஹ்மத்தின் பரிணாமம் என்று சொன்னால், 'ஜீவன் நித்யன், பிறப்பற்றவன்', 'ப்ரஹ்மம் நிர்விகாரம்' என்று சொல்லும் ச்ருதி வாக்யங்கள் விரோதிக்கும்.

ஶ்ரத்ததாநாநாம்—உபதேச மாத்ரத்தால் த்ருப்தி அடைபவர்களின் கக்ஷி இது. ந்யாய விசாரம் செய்து ஒருவித நிர்ணயம் ஏற்படுத்தச் சக்தியுள்ளவர்கள் இம்மாதிரி கக்ஷியை அவலம்பிக்க மாட்டார்கள் என்பது குறிப்பு.



[illegible]

த்ருதீயே... [illegible]

---

ஸ்வரூப... ........அவர்ஜநீய ஏவ—தவிரவும், ப்ரஹ்ம ஸ்வரூபமே அசேதந வஸ்துக்களாகப் பரிணமிக்கின்றது என்று நீங்கள் சொல்வதும் அநுபபந்நம். அப்படி ஸ்வரூப பரிணாமத்தை ஒத்துக்கொண்டால் 'ப்ரஹ்மம் எவ்வித விகாரமும் அற்றது' என்று சொல்லும் ச்ருதி வாக்யம் விரோதிக்குமன்றோ? 'ஸ்வரூபம் பரிணமிக்கின்றது என்று நாங்கள் சொல்லவில்லை; ஆனால் ப்ரஹ்மத்தின் சக்தியே அவ்விதம் பரிணமிக்கின்றது என்று மாத்ரம் சொல்லுகின்றோம். ஆகையால் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்திற்கு எவ்வித தோஷமும் ப்ரஸங்கிக்கமாட்டாது' என்னில், சக்தி என்று உங்களால் சொல்லப்படுவது எது? அது ப்ரஹ்மத்தின் பரிணாமமா? இல்லாவிட்டால் அது ப்ரஹ்மமேயா? இரண்டு கோடியிலும் ப்ரஹ்மம் பரிணமிக்கின்றது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ளவே வேண்டும். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியில்லை.

---

த்ருதீயே..........உபயத்ர—மூன்றாவது பக்ஷத்திலும், ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் ஒத்துக்கொள்ளப்படுவது போல அபேதமும் ஒத்துக்கொள்

---

ஸ்வரூபபரிணாம—இதுவரையில், 'ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே' என்று சொல்வது 'ப்ரஹ்மம் தோஷமற்றது' என்று சொல்லும் ச்ருதிவாக்யத்திற்கு விருத்தம் என்பது உபபாதிக்கப்பட்டது. இப்பொழுது 'ப்ரஹ்மமே அசேதந வஸ்துக்களாகப் பரிணமிக்கின்றது' என்று சொல்வதின் அநுபபத்தியை எடுத்துச் சொல்லுகிறார்.

உபயபக்ஷேऽபி—இரண்டு கோடியிலும். 'சக்தி என்பது ப்ரஹ்மத்தின் பரிணாமம்' என்றால் ப்ரஹ்மம் பரிணமிக்கின்றது என்பது ஒத்துக்கொள்ளப்பட்டதாகிறது. 'சக்தி என்பது ப்ரஹ்மத்தின் பரிணாமமன்று. அது ப்ரஹ்மமே' என்றால், அப்பொழுதும் 'சக்தி பரிணமிக்கின்றது' என்று சொல்லுகிறபடியால் ப்ரஹ்மமே பரிணமிக்கின்றது என்று சொன்னதாகிறது.

---

த்ருதீயேऽபி பக்ஷே—இதுவரையில் பாஸ்கர மதம் கண்டிக்கப்பட்டது; இனி யாதவ ப்ரகாச மதம் கண்டிக்கப்படுகின்றது. இவ்விடத்தில் இந்த இரண்டு மதஸ்தர்களுடைய கொள்கைகளைச் சற்றுப் பராமர்சிப்போம். இவர்கள் இருவரும் ப்ர

**ஶ்ரூயமாணத்வாத், தத்த்வமஸி தத்பாவாத், ஸௌபரி பேதவத் அவதாரபேதவத் ஸர்வஶரீரஸம்பந்தேஶ்வராத், ஸர்வே ஜீவகதா தோஷாஸ்தஸ்யைவ**

---

ஏற்படுகிறபடியாலும், ப்ரஹ்மத்திற்கே ஜீவத்தன்மை சொல்லப்படுகிறபடியாலும், ஸௌபரி மஹர்ஷி விஷயத்தில் இருந்த பேதம் போலவும், ஈச்வரனுடைய அவதார விஷயங்களில் இருக்கும் பேதம் போலவும், எல்லாவற்றிற்கும் ஈச்வரனுக்குமுள்ள பேதம் இருக்

---

பஞ்சம் பரமார்த்தம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சங்கர மதத்தில் ப்ரபஞ்சம் என்பது பொய்; இவர்கள் மதத்தில் அப்படி இல்லை. இவர்கள் அவ்விதம் ஒத்துக்கொள்வதற்குக் காரணமென்னவென்றால், தங்களுக்கு அபிமதமான அர்த்தத்தை ஸாதித்துக் கொடுக்கும் ச்ருதியாகிற ப்ரமாணம் ஸித்திக்கவேண்டும் என்பதும், பந்தம் மோக்ஷம் இவைகளுக்கு வ்யவஸ்தை ஸித்திக்கவேண்டும் என்பதுமே. இவர்களுள் பாஸ்கர மதஸ்தர்கள், மோக்ஷம் வந்தபிறகு ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று சொல்லும் ச்ருதி வாக்ய பலத்தைக்கொண்டு 'ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ஸ்வாபாவிக பேதமில்லை; ஆனால் உபாதி ஸம்பந்தத்தால் ஏற்படும் ஔபாதிக பேதம் மாத்ரம் உண்டு' என்றும், 'அசித் வஸ்துவுக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதமும் ஸ்வாபாவிகம், அபேதமும் ஸ்வாபாவிகம்' என்றும் சொல்லுகிறார்கள். இப்படி அசித்துக்கும் ப்ரஹ்மத்திற்கும் பேதம் அபேதம் இரண்டும் ஸ்வாபாவிகங்கள் என்று சொல்வதற்குக் காரணம், ஸகல பதார்த்தங்களும் ப்ரஹ்மத்தை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றன என்றும், ப்ரஹ்மம் எவ்வித மலமும் அற்றது என்றும் சொல்லும் ச்ருதி வாக்ய பலமே. யாதவப்ரகாச மதஸ்தர்கள், 'மோக்ஷம் வந்த பிறகும் ஜீவனும் ப்ரஹ்மமும் வெவ்வேறு' என்று சொல்லும் ச்ருதி வாக்ய பலத்தைக் கைப்பற்றி, 'ஜீவனுக்கும் ப்ரஹ்மத்திற்கும் உள்ள பேதம் அபேதம் இரண்டும், அசித்துக்கும் ப்ரஹ்மத்திற்குமுள்ள பேதாபேதங்கள் போல ஸ்வாபாவிகங்கள்' என்று சொல்லுகிறார்கள். இதுதான் இவர்களுக்குள்ள வ்யத்யாஸம். இவைகளைப் பற்றிய மற்றை அம்சங்கள் அவ்வவ்விடங்களில் உபபாதிக்கப்படும்.

**தத்த்வமஸி தத்பாவாத்**—ப்ரஹ்மத்திற்கு ஜீவத்தன்மை ஏற்படுகிறபடியால், முதல் 'தத்' சப்தம் ப்ரஹ்மத்தையும், இரண்டாவது 'தத்' சப்தம் ஜீவனையும் குறிக்கின்றன.

**ஸௌபரிபேதவத்**—ஸௌபரி என்பவர் ஏககாலத்தில் அநேக சரீரங்களை எடுத்துக்கொண்டதாகப் புராணகதை சொல்லுகின்றது. அப்படி சரீரபேதம் வந்தும் அந்தச் சரீரங்களுக்குள் இருந்த ஜீவன் ஒன்றாகவே இருந்தது என்பது இவ்விடத்தில் விஷயம்.

**அவதாரபேதவத்**—பகவான் பல அவதாரம் எடுக்கையிலும் எல்லா அவதாரங்களுக்கும் ஈச்வரத்வம் உண்டு என்பது விஷயம்.



**ஸ்யு: | ஸத்யம் ஸவதி — 'ஸம்ஸ்த: ஸ்வரூபேணைவ ஸர்வாத்மா ப்ரஹ்மஸ்வரூபஸ்வஹைதுகவிஷயத்வஸ்ய தாதாத்ம்யவர்ணனம் க்ரியதே | ததா ஸதேதச்ருதி ஸ்வாபாவிகபேதாபேதவாதி மதாநி உபகாரகாணி ஸர்வகாரணீ யதா தஸ்யைவ ஸவந்தி, ஸவம் ஸர்வஜீவகதா ஸர்வோபாதி ஸர்வேஶ்வரகதஶ்சைவ ஸாந்தா:' இதி | 'ஸ்வாபாவிகாபேதாஸ்வாபாவிகஸம்ஸ்தா தாதாத்ம்யாத்மகப்ரஹ்மஸ்வரூபம் யதா காரணகாரியத்வதோ, ஸவமேவ ஸர்வ**

---

கிறபடியாலும், ஜீவனிடத்தில் தென்படும் தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் ப்ரஸங்கிக்கும். எப்படியென்றால்—'ஜகத் ஈச்வரனை ஆத்மாவாக உடைத்தாயிருக்கின்றது என்று அவர்கள் சொல்வது உண்மையேயாயினும், ஈச்வரன் தனது ஸ்வரூபத்தாலேயே தேவனாகவும் மநுஷ்யனாகவும் திர்யக்குக்களாகவும் ஸ்தாவரங்களாகவும் பிந்ந பிந்நமாக நிற்கிறான் என்பதன்றோ அவர்கள் அப்படிச் சொல்வதன் கருத்து? அப்படி ஈச்வர ஸ்வரூபமே இவ்விதமாக நிற்கின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், ஸகல ஜீவன்களாலும் அநுபவிக்கப்படும் ஸுக துக்கங்களெல்லாம் ஈச்வரனாலேயே அநுபவிக்கப்படுகின்றது என்று ஒத்துக் கொள்ளவேண்டும். குடம் மடக்கு முதலியவைகள் எந்த மண் உருண்டையின் ஸ்வரூபாவஸ்திதியோ அந்த மண் உருண்டைக்கே, அந்தக் குடம் மடக்கு முதலியவைகளைக்கொண்டு செய்யப்படும் ஜலாஹரணம் முதலிய கார்யங்கள் அந்வயிப்பதை நாம் பார்க்கிறோமன்றோ? அதுபோல் ஜீவனைப் பற்றி நிற்கும் தோஷங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கே அந்வயிக்க வேண்டாவோ'? 'குடம் மடக்கு முதலியவைகளாகச் செய்யப்படாமலிருக்கும் மண் உருண்டைக்குக் கார்யமொன்றும் எப்படி

---

**ஸம்ஸ்த ஸ்வரூபேணைவ ஸர்வஸ்யேதி தாதாத்ம்யவர்ணனாத்**—யாதவப்ரகாச மதஸ்தர்கள், நம்மைப் போல ஜகத்திற்கு ப்ரஹ்மாத்மகத்தன்மையை ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் நாம், 'ப்ரபஞ்சம் சரீரம், ப்ரஹ்மம் அதற்கு ஆத்மா' என்று ப்ரபஞ்சத்திற்கு ப்ரஹ்மாத்மகத்வம் சொல்லுகிறோம்; அவர்கள், 'ப்ரஹ்மமே ப்ரபஞ்சமாக நிற்கிறது' என்று ப்ரஹ்மாத்மகத்வம் சொல்லுகிறார்கள். இப்படி ப்ரஹ்மாத்மகத்வம் சொல்வதைத்தான் 'ஸ்வரூபேண' என்னும் சப்தம் குறிக்கின்றது.

**ஸ்வாபாவிகாபேதாஸ்வாபாவிகஸம்ஸ்தாதாத்ம்யாத்மக ப்ரஹ்மஸ்வரூபம்**—'ப்ரஹ்மத்தில் ஒரு அம்சமே ஜீவனாகின்றது; அப்படி ஜீவனான அம்சத்திற்கு ஜீவன்களிடம் காணப்படும் தோஷங்கள் ப்ரஸங்கித்தாலும், ஜீவனாகாமலிருக்கும் மற்றொரு அம்சத்துக்கு அவை ப்ரஸங்கிக்கமாட்டா' என்னும் ஸமாதானத்தைத் தூஷிக்கிறார். அம்சங்கள் இரண்டானாலும் அம்சி ஒன்று தானே என்பதுதான் தூஷணம்.

# உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

## நகை வர்த்தகர்கள்.





தொழிற்சாலை.

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு; சென்னை

காட்சி அறை

25, சைனாபஜார் ரோட், மதராஸ்.

## நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கோடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கோண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கோடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கோடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



வஸ்ரஜாதி ஜீவஸாதாரண்யேந ஸவஜ்ஞத்வ ஸத்யஸங்கல்பத்வாதி கல்யாணகுணாகர: ' இதி சேத் ஸத்யம் । ' ஸ ஸர்வேஶ்வர ஏகேநாம்ஶேந கல்யாணகுணாகர:, ஸ ஏவாந்யேநாம்ஶேந ஹேயகுணாகர: ' இத்யுக்தம், அம்ஶயோரீஶ்வரவிஶேஷாத் । ' அம்ஶயோ வ்யவஸ்தித ' இதி சேத், கஸ்தத்ர லாப: ? ஏகஸ்யைவைகேநாம்ஶேந நித்யது:கித்வாத் அம்ஶாந்தரேண ஸுகித்வேபி நேஶ்வரத்வம் கல்பதே । யதா தேவதத்தஸ்யைகஸ்மிந் ஹஸ்தே அங்கதவலயாங்குலீயாலங்காரா:, தஸ்யைவாந்யஸ்மிந் ஹஸ்தே முத்கராபிகாத: காலாநல ஜ்வாலாநுப்ரவேஶஶ்ச, தஸ்யைவேஶ்வரஸ்ய ஸுகா

---

அந்வயிக்க வில்லையோ, அப்படியே தேவனாகவும் மநுஷ்யனாகவும் பசுவாகவும் ஸ்தாவர மாகவும் இல்லாமல் இருக்கும் ஈச்வராம்சத்திற்கு ஒரு தோஷமும் அந்வயிக்கமாட்டாது ; அந்த ஈச்வராம்சம், ஸர்வஜ்ஞத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய கல்யாண குணங் களுக்கெல்லாம் இருப்பிடமாகவும் இருக்கக்கூடும்' என்னில், அது உண்மையே. இப்படிச் சொல்வதன் அர்த்தமென்ன வென்றால், ' ஒரே ஈச்வரன் ஒரு அம்சத் தில் கல்யாண குணாகரன், மற்றொரு அம்சத்தில் ஹேயகுணாகரன்' என்பது தான். இரண்டு அம்சங்களுக்கும் ஈச்வரத்தன்மை இருக்கின்றதன்றோ ? 'அப்படி இல்லை ; இரண்டு அம்சங்களும் வெவ்வேறாக வ்யவஸ்திதங்களாக இருக்கின்றன' என்னில், அப்படிப்பட்ட வ்யவஸ்தையால் லாபமென்ன ? எப்படிப்பட்ட வ்யவஸ்தை இருந்தபோதிலும், ஒருவனுக்கே ஒரு பக்கத்தில் எப்பொழுதும் துக்காநுபவ மும் மற்றொரு பக்கத்தில் எப்பொழுதும் ஸுகாநுபவமும் இருந்தால், அவனை ஈச்வர னென்று எப்படிச் சொல்லக்கூடும்? இது, ஒருவனுக்கு, ஒரு கையில் உத்தமமான சந்தநப் பூச்சும் தோள்வளை கங்கணம் மோதிரம் முதலிய ஆபரணங்களால் அலங்காரமும், மற் றொரு கையில் உலக்கையால் அடியும் பெருத்த தீயின் ஜ்வாலையில் ப்ரவேசமும் செய்வதற் குத் துல்யமன்றோ ? ' ப்ரஹ்மத்திற்கு அஜ்ஞானம் நேர்கின்றது ' என்று சொல்லும்

---

' அங்கதவலயாதய: ' என்பது ஐஹிக அல்ப ஸுகத்திற்கு த்ருஷ்டாந்தம் ; 'கேயூராத்யலங்காரா:' என்பது மோக்ஷ ஸுகத்திற்கு த்ருஷ்டாந்தம். இப்படியே ' முத்கராபிகாத: ' என்பது ஐஹிக அல்ப துக்கத்தையும் ' காலாநல ஜ்வாலாநுப்ரவேஶ: ' என்பது நரக ஸம்பந்தமாயும் அநந்தமாயுமுள்ள துக்கத்தையும் குறிக்கின்றது.

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

# அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.




| | |
|---|---|
| தலைவலி | இருமல் |
| நரம்புவலி | ஜளிப்பு |
| முதுகுவலி | நெருப்புக்காயம் |
| இடுப்புவலி | காயங்கள் |
| கீல்வாயு | சுளுக்குகள் |

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

## அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய். மதராஸ்.

இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.